விலை சதம் 50 ★ ★ பக்கங்கள்— 10

சுவையான ஐஸ்கிறீம் வகை களுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவிட்ஸ், றிக்கோ பீடா வகைகளுக்கும்
றிக்கோஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு வார மலர்

*THE EELANADU VARAMALAR*

துரித சலவைக்கு கூடுதல் நீலம் கலந்து தயாரிக்கப்பட்ட
மில்க்வைற் சலவைப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள். பல அளவுகளில் விற்பனையா கிக்கொண்டிருக்கின்றது.
—ஓர் மில்க்வைற் தயாரிப்பு

மலர் 19 ஆடி 9 ஷஃபா: 7 ஞாயிற்றுக்கிழமை [24—7—77] இதழ் 163



வெற்றிபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் க. துரைரத்தினம், வி. ஆனந்தசங்கரி, த. ராஜலிங்கம், தா. திருநாவுக்கரசு பண்டிதர் கா. பொ. ரத்தினம், வி. தர்மலிங்கம் ஆகியோர் மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்.

## பிரதமர் ஜே. ஆர். தலைமையில்

# 24 மந்திரிகள் பதவியேற்பு!

## தேவநாயகம், ஹமீதும் அமைச்சர்கள் பிரதி மந்திரிகளும் நியமனம்

(கொழும்பு)

**இலங்கைக் குடியரசின் இரண்டாவது பிரதமமந்திரியாக ஐக்கியதேசியக் கட்சியின் 72 வயதானதலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.**

**புதிய மந்திரி சபையும் இன்று பதவி ஏற்றது.**

**புதிய அமைச்சரவையில் நியமிக்கப்பட்டுள்ள 24 அமைச்சர்களில் 21 பேர் இன்று ஜனதிபதி மாளிகையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டனர்.**

**இந்த அமைச்சரவையில் ஒரு தமிழரும், இரண்டு முஸ்லிம்களும் ஒரு பெண்மணியும் அங்கம்வகிக்கின்றனர்.**



நல்லூர் தொகுதியில் வெகு பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டிய கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரான திரு. எம். சிவசிதம்பரம்,

**26 பிரதி அமைச்சர்களும் இன்று ஜனதிபதி முன் சத்தியப்பிரமாணம்செய்து பதவி ஏற்றனர்.**

அமைச்சர்களின் சத்தியப்பிரமாணம் முடிவடைந்ததும் மாலை 6 மணிக்கு புதிய மந்திரி சபை கூடி எதிர்கால நடவடிக்கை பற்றி ஆராய்ந்தது

பொதுத் தேர்தலில் கடைசி முடிவு வெளியான சில நிமிடங்களுக்கெல்லாம் ஜனதிபதி திரு. வில்லியம் கோபல்லவாவின் அழைப்பை ஏற்று திரு ஜே ஆர். ஜயவர்த்தன ஜனதிபதி மாளிகைக்குச் சென்ருர். அங்கு ஜனதிபதி வில்லியம் கோபல்லவா அவருக்குச் சத்தியப்பிரமாணம் செய்து வைத்தார். அதன்பின்னர் பிரதம மந்திரி திரு. ஜயவர்த்தன ஜனதிபதி மாளிகையிலுள்ள பிரார்த்தனை மண்டபத்தில் மலர் அஞ்சலி செலுத்தினர்.

**அமைச்சரவை**

திரு. ஆர் பிரேமதாசாவுக்கு உள்நாட்டு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சும், திரு. கே. டபிள்யூ தேவநாயகத்திற்கு நீதி அமைச்சும், திரு. நிஸங்கா விஜயரத்தினவிடம் கல்வி அமைச்சும், திரு காமினி திஸநாயக்காவிடம் நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சும் ஒப்படைக்கப்பட்டுள்ளன

**நிதி அமைச்சர்**

திரு ரொனி டி மெல் நிதி அமைச்சராகவுப் கப்பல் விமானப் போக்குவரத்து உல்லாசப்பயணத்துறை அமைச்சராக திருமதி விமலா கன்னங்கராவும் நியமிக்கப்பட்டுள்ளனர்

(இ)

## கண்டி கேகாலை, மாத்தளையில் இரவில் ஊரடங்கு அமுல்!

(கொழும்பு)

கண்டி, மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் கொழும்பில் சில பிரிவுகளிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் திவுலுப்பிட்டியா, மினுவாங்கொடை, நித்தம்புவ ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களின் மாத்தளை சகல பகுதிகளிலும் ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது.

இரவு 9 மணி முதல் காலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலே சொல்லப்பட்ட பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதை அடுத்தே ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

(இ)

### ஊர்வலத்துக்கு தடை!

(கொழும்பு)

நாட்டில் ஊர்வலங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் திரு ஸ்டான்லி சேனநாயகா அறிவித்துள்ளார்,

அனுமதியின்றி அரச, கூட்டுத்தாபனவாகனங்களை பாவிப்பதும் லொறிகளில் மூவருக்குமேல் பிரயாணம் செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்,



யாழ்ப்பாணத்தொகுதியில் வெற்றிவாகைசூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. வெற்றிவேல் யோகேஸ்வரன் மாலைகளுடன் காணப்படுகின்றார். அருகில் உதவி தேர்தல் ஆணையாளர் திரு. இ யோகநாதன் காணப்படுகின்றார்.

# தொண்டமான் வெற்றி

## அனுரா இரண்டாவது எம். பி.

கொழும்பு, சனி

மஸ்கெலிய - நுவரேலிய தொகுதியில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவருமு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் தேசியஅரசுப் பேரவைக்கு மூன்ருவது எம். பி.யாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இத் தொகுதியில் முதல் எம். பியாக ஐக்கியதேசியக் கட்சியின் இளந்தலைவரான காமினி திஸநாயக்காவும் இரண்டாவது எம். பி.யாக முன்னாள் பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் புதல்வர் திரு. அனுராபண்டாரநாயகாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத் தொகுதி முடிவுகள் வருமாறு:

காமினி திஸநாயக்க (ஐ தே க) 65903.

அனுரா பண்டாரநாாக்க (சி சு க) 48776.

எஸ் தொண்டமான் (இ தொ கா) 35743.

ரி. ஐயாத்துரை (சுயேச்சை) 3026.

காமினி ஆரியதிலக்க (சுயேச்சை) 2,049.

எச். எம். அபேசிங்க (சுயேச்சை) 1175

ஏ. எம். அலீஸ் (சுயேச்சை) 916.

கே ஜி ரத்னபால (சுயேச்சை) 696.

எஸ் பி ருெபர்ட் பெரேரா (சுயேச்சை) 604.

சி ஆர் தல்தென (சுயேச்சை) 556.

ஜி டபிள்யு பத்திரன (சுயேச்சை) 210.

ஆர் ஈ ஜயதிலக்க (சுயேச்சை) 94.

ஜே ஜே ஜி சிறில்காந்த (சுயேச்சை) 91.

அசோகா அட்டபத்து (சுயேச்சை) 87.

திரு. காமினி திஸநாயக்காவுக்கு 17123 பெரும்பான்மை வாக்குகளும் திரு. அனுரா பண்டாரநாயக்காவுக்கு 13033 பெரும்பான்மை வாக்குகளும் திரு. தொண்டமானுக்கு 32717 அதிகப்படியான வாக்குகளும் கிடைத்துள்ளன.

## வவுனியாவில் தாக்குதல்!

(வவனியா)

வவுனியா மாவட்டத்தில் ஒரு கோஷ்டியினர் லொறியில் வந்து அங்குள்ள சில கடைகளையும் சிலரையும் தாக்கினராம். பொலிசாரின் உடன் நடவடிக்கையினால் அக் கோஷ்டியினர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ்நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தனர்.

சில மணி நேரத்தின் பின்னர் வேருெரு லொறியிலும் 1 கோஷ்டியினர் வந்து தாக்கமுற்பட்டபோது அவர்கள் பொலிசாரினல் தடுத்துநிறுத்திவைக்கப்பட்டனர், தற்போது பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது, இதை அடுத்து இங்கு அமைதிநிலவுவதாக அறிவிக்கப்படுகிறது-

# எம். ஜி. ஆர். - கருணநிதி நெடுஞ்செழியன் மகிழ்ச்சி

(சென்னே)

இலங்கைப் பொதுத்தேர்தல் முடிவுகள் குறித்துத் தமிழ் நாட்டில் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்

தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இலங்கைப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை அனுப்பினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இத்தேர்தலில் ஈட்டிய வெற்றி குறித்தும் பாராட்டுத் தந்தி ஒன்றை தமிழக முதல்வர் தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர் திரு ஏ. அமிர்தலிங்கத்துக்கு அனுப்பி வைத்தார்.

தமிழ் நாடு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், தி. மு. க. தலைவருமான திரு. மு. கருணநிதியும், மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு இரா நெடுஞ்செழியனும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கத்துக்கு பாராட்டுத் தந்தி அனுப்பியுள்ளார்.


**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

விண்ணப்பதாரர் திடகாத்திரம், நேர்மை, கடின உழைப்பு அத்துடன் அனுபவமும் உடையவராக இருத்தல் வேண்டும். யாழ்ப்பாணம், வவுனியாப் பகுதிகளில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்கவும்.

ஆளணி உத்தியோகத்தர்,
6, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

6705

**வரி விளம்பரம்**

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள மண்ணெண்ணெயில் இயங்கும் Glacio குளிர் சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு No. 16, 5-ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். 6687

**தேவை**

நெசவுத் தொழிலில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. விபரங்களுக்கு: அ. க. தர்மலிங்கம், நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு.

6707

**பயிற்சி**

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு; இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னேலொஜி, 11/B. ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

6686

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குரிய, சிறந்த வெல்டிங் பயிற்சிக்கு வெல்டிங் என்ஜினியரை அதிபராகக் கொண்ட JBT - ARC Welding School ஜூலை 30ல் அடுத்த வகுப்புகள் ஆரம்பம், பாலன் அயன் வேர்க்ஸ், 409, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

6706


# ஐக்கியம் சிதற இடமளிக்காதீர்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

''வன்செயல்களுக்கு இடம் அளிப்பதன் மூலம், நமக்குள் இருக்கின்ற ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் சிதற இடம் கொடுக்கக் கூடாது''.

இவ்வாறு நேற்று முன்தினம் குருநகர்மக்கள் மத்தியில் உரை நிகழ்த்திய யாழ்ப்பாணத்தொகுதியில்தேசிய அரசுப்பேரவைக்குதெரிவுசெய்யப்பட்ட திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் தேர்தல் முடிவுகளை அடுத்து கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''எனது அன்பிற்குப் பாத்திரமான குருநகர் தொகுதி வாக்காளப் பெருமக்களே; உங்களிடம் நான் மிகப்பணிவான ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். இந்தத் தொகுதியில் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட டாக்டர் ஏபிரகாம் மிகக் கண்ணியத்துடனும், பண்புடனும் தனது தேர்தல் பிரசாரத்தை நடாத்தினர். எனவே எவராவது அவரது மனம் நோக நடந்து கொள்ள வேண்டாம். என்னை உங்கள் அபேட்சகராக தெரிவு செய்ததுடன் எமது போராட்டம் முடிவடைந்துவிட்டதாக எண்ணக் கூடாது. எமது போராட்டம் இனிமேல்தான் ஆரம்பமாகப் போகின்றது அந்தப் போராட்டத்தில் எமக்குள் இருக்கின்ற பேதங்களையும், வேற்றுமைகளையும் மறந்து சகலரும் ஒன்றிணைந்து நமது இலட்சியத்திற்காகப் போராட வேண்டும்'' என்ருர்.

(கா)


## எலிபன்ட் ஹவுஸ்

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டட்

# தட்டுப்பாடு யானைமார்க் குளிர்பானங்கள்

எங்களது கட்டுப்பாட்டையும் மீறிவிட்ட சூழ்நிலை காரணமாக, கம்பெனியின் குளிர்பானங்களின் விநியோக நிலைமை. வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எமது கம்பெனியின் மற்றைய தயாரிப்புகளான ஐஸ்கிறீம். ஜாம், 'கோடியல்' போன்றவற்றின் விநியோக நிலைமையும் இதேபோன்று பெருமளவில் பாதிப்படைந்துள்ளன.

நிலைமை சீராகும்வரை; பொதுமக்கள் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள சிரமத்தைச்சகித்துக்கொள்ளும்படி தயவாய்க்கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சில மோசடிப் பேர்வழிகள், யானை மார்க் குளிர்பான போத்தல்களிக் எமது லேபல்களை ஒத்த 'போலி லேபல்'களை ஒட்டித் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றி வருகின்றனர். இதனல் குளிர்பானங்களை வாங்கும்போது விழிப்பாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்ருேம்.


## சில சுவையான செய்திகள்

தேர்தல் முடிந்ததும் திரு. தொண்டமானின் எஞ்சியுள்ள தோட்டங்களையும் பறித்துக் கொண்டு நாட்டைவிட்டே துரத்துவோம் என்று தேர்தல் கூட்டங்களில் கொக்கரித்துக் கொண்டிருந்த முன்னாள் விவசாயக் காணி அமைச்சர் திரு. கொப்பேகடுவ யட்டிநுவர தொகுதியில் தோல்வியடைந்துள்ளார். அதே சமயம் திரு. எஸ். தொண்டமான் மஸ்கெலிய - நுவரெலிய தொகுதியில் 3-வது உறுப்பினராக தேசியஅரசுப்பேரவைக்குத் தெரிவாகியுள்ளார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைப் பதவி ஏற்கவிடமாட்டோம் என்றும்கூட திரு. கொப்பேகடுவ பேசிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தாயும் மகனும்

இந்தியாவில் பசுவும் கன்றும் சின்னமாகக்கொண்ட காங்கிரஸ் கட்சியின் தலைவி திருமதி இந்திராவும் அவரது மகன் சஞ்சய் காந்தியும் தோல்வியுற்றதுபோல் இங்கேயும் பசுவு கன்றும் தோல்விகாண நேரும் என்று திரு. ஜே. ஆர் கூறி வந்தார். ஆனல் இங்கு திருமதி சிறிமா பண்டாரநாயக்க அத்தனகலைத் தொகுதியிலும் அவரது மகன் மஸ்கெலிய-நுவரெலிய தொகுதியிலும் வெற்றிபெற்றுள்ளார்.

### அன்று யு. என். பி. இன்று?

1956-ம் ஆண்டு தேர்தலில் அப்போதைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை தலைமையில் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆக எட்டுத் தொகுதிகளில்மட்டுமேவெற்றி பெற்று மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு வந்தது.

அதே விதத்தில் இம்முறை பதவியிலிருந்த பண்டாரநாயக்காவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆக எட்டு பிரதிநிதிகளை மாத்திரம் கொண்டதாக தேசிய அரசுப் பேரவைக்கு வந்துள்ளது.

### கணவன் மனைவி தோல்வி

முன்னாள் அமைச்சர் திரு. இலங்கரத்னவும்அவரதுமனைவி தமராகுமாரி இலங்கரத்னவும் மாத்திரமின்றி முன்னாள் சமசமாஜக் கட்சி அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்தனவும் அவரது மனைவி விவியன் குணவர்த்தனவும்இந்தத்தேர்தலில் தோல்விகண்ட தம்பதிகளாவர்.

களனிய தொகுதியில் திரு. சிறில் மத்தியூவும் கொலன்னே தொகுதியில் அவரது மகன் நந்தா மத்தியுவும் வெற்றிபெற்றுள்ளனர்.

### 3 யு. என். பி. பெண் எம். பிக்கள்

ஐ. தே கட்சி சார்பில் போட்டியிட்ட மூன்று பெண்கள் வெற்றியீட்டியுள்ளனர். வலப்பன தொகுதியில் செல்வி றெனுக்கா ஹேராத், கல்கமுவா தொகுதியில் திருமதி விமலா கன்னங்கரா, வாரியப்பொல தொகுதியில் செல்வி அமராவதி பியசீலி ரட்னயக்க ஆகியவர்களே அவர்கள்.

### 12 மந்திரிகளுக்கு பென்ஷன்

பதவியிலிருந்த 12 மந்திரிகளுக்கு மக்கள் இத் தேர்தலில் பென்ஷன் வழங்கியிருக்கிருர்கள். நல்லகாலமாக, எம். பி. மாருக்கு பென்ஷன் வழங்கும் சட்டத்தை இவர்கள் நிறைவேற்றிய பின்னரே தேர்தல் நடைபெற்றுள்ளது.

உலகில் பதவியில் எஞ்சியிருந்த ஒரேஒரு பெண் பிரதமரான திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவும் மக்கள்வாக்கினல் பதவி இறக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே, இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி இஸ்ரேலிய பிரதம மந்திரி திருமதி கோல்டா மேயர் ஆகியவர்கள் பதவி இழந்தனர்.



# காலம் மாறிய போது!

கமலம்மாள் குசினிக்குள் மாவாட்டி முடிந்ததும் கேத்திலைத் தூக்கி அடுப்பில் வைத்தாள்.

"நாலு பேர் மெச்ச ஒரு நல்ல மருமகளாய்ப் பார்த்து வீட்டுக்கு வச்சிட்டா, உங்களுக்கு ஆறுதல் இல்லையா? தம்பியும் ஒண்டியாக எவ்வளவு காலம் இருப்பது" என்று மாவிடிக்கும் லட்சுமி சொன்ன வார்த்தைகள் அவளுடைய மனநிலையை கொஞ்சம் தட்டி உள்ளூர இருந்த ஆசையைத் தூண்டிவிட்டது.

கமலம்மாள் ஒரு விதவை. இவ்வூருக்கு வேலைக்காக வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. இவ்வூரில் அவள் யாருடனும் ஒட்டி உறவுகொண்டாடவில்லை. எட்ட எட்ட விரல் விட்டு எண்ணக்கூடிய சில குடும்பங்களுடன் நன்மை தீமைகளுக்குப் போய் வரும் சிநேகம்—ஆசைக்கொரு மகன். அவளுடைய சொத்துச் சுதந்திரம் எல்லாம் அவன்தான்—மகனுக்கு நல்ல வேலை. சுமாரான சம்பளம்—காசுக்குக்கஷ்டமில்லை.

கதவு தட்டும் சத்தம் கேட்டு ஓடிப்போய் மலர்ந்த முகத்துடன் கதவைத் திறந்தாள் கமலம்மாள் - இருபத்தெட்டு வயது நிரம்பாத காவியக் காளை; புன்முறுவலுடன் கமலம்மாளின் தோளில் கை வைத்தபடி உள்ளே நுழைந்தான்— ஒரு தாய் பெருமைப் படக்கூடிய அத்தனை குணங்களையும் உள்ள செல்வ மகனை அன்பு ததும்பப்பார்த்தபடியே

"ஏன் ராஜா" இத்தனை நேரம்? சோர்வாய்க் காணப்படுகிறாய் ஆபீஸில் நிரம்ப வேலையோ? சுடச்சுட காப்பி கொண்டு வருகிறேன்" என்று குசினிக்குள் போனாள்.

ராஜா முகம், கை, கால் அலம்பி திருநீறு பூசி முன் அறைக்குள் வர கமலம்மாளும் காப்பியைக்கொண்டுவந்தாள்.

"அம்மா!" என்றான் காப்பியைக் கையில் வாங்கியபடி. எப்போதும் ஆபீசால் வந்தவுடன் அங்கு நடந்த அத்தனையும் சிரித்துச் சிரித்துச் சொல்வதும் கமலம்மாளும் ஆர்வத்துடன் பிழை சரி சொல்வதும் அவர்களுடைய நாளாந்த நிகழ்ச்சி நிரலில் வழக்கமான கட்டமாகும்.

"என்ன ராஜா"

"காப்பி வழக்கத்தைவிட ஜோர்! மணத்திலேயே என் களைப்பும் போய்விட்டது" என்றான் காப்பியைக் குடித்தபடி.

"என்ன இன்று ஒருவித மாறுதல், சந்தோஷமும்கூட!"

"அம்மா இன்று நான் ஒரு புதுச்செய்தி கொண்டுவந்திருக்கிறேன். நன்றாய் யோசிக்க வேண்டிய விஷயம்-என் ஆபீசுக்குப் புதிதாய் வந்திருக்கும் மனேஜருக்கு என் மீது ஒரு கண்ணோட்டம்! அவருக்கு மனைவியில்லையாம்-ஒரே ஒரு செல்வ மகளாம். படித்த பெண்ணும் என்னை மருமகனாக்க அவருக்குக் கொள்ளை ஆசையாம் விரும்பினால் பெண் பார்க்கும் நாளை எதிர்பார்க்கிறாராம்" என்று மூச்சுவிடாமல் கூறிமுடித்தான் ராஜா-

"அம்மா அம்மா என்று சுற்றிக்கொண்டிருக்கும் உனக்கொரு மனைவி வந்திட்டா என்ன செய்வாயாக்கும்? உனக்கு வாய்க்கும் மனைவி எனது மருமகள் எப்படியிருப்பாளோ;" என்று அங்கலாய்த்துக்கொண்டாள்.

ராஜா எப்பேசதும் நிதானமாகவே கதைப்பவன். தாயின் அன்பைப் புரிந்துகொண்டான். தாயே தெய்வமாகக் கொண்டாடும் அவன் தன் உள்ளத்தில் நினைத்ததை அப்படியே சொல்லிவிட்டான்.

"அம்மா உன்மாதிரியே அவளும் இருக்கணும். எதையும் தாங்கும் இதயம் இருக்கணும் - ஒருநாள் எனக்குப் பிறக்கப்போகும் பெண் குழந்தையும் உன்மாதிரி எல்லாமே அம்மா மாதிரியே இருக்கணும் என்று நான் எப்போதும் முருகனை வேண்டுகிறேன் அம்மா" என்று ஒரு நெடிய பெருமூச்சு விட்டான் ராஜா-

இவைகளைக் கேட்டதும் அப்படியே பூரித்துப் போனாள் கமலம்மாள். உலகத்தையே தன் மகனிடம் கண்டு கொண்ட கமலம்மாளுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?—

"ராஜா நீ போம் அந்தப் பெண்ணைப் பார்த்துப் பிடித்துக்கொண்டா கல்யாணத்தை நடத்திவிடலாம். எனக்கும ஆறுதல் வீட்டுக்கும் ஒரு ஒரு மருமகள் வந்துவிடுவாள்" என்றாள்.

பெண் பார்க்கும் நாள்— அன்று பின்னேரம் தாயையும் மகன் ராஜாவையும், மனேஜரும் மகளும கைகூப்பி வரவேற்றார்கள். ராஜாவும் சிரித்தபடியே பதிலுக்குக் கைகூப்பி உட்கார்ந்தான். பெண்ணின் தகப்பனைக் கண்டதும் திடுக்கிட்டாள் கமலம்மாள்! தலை சுழன்றது? இதயம் படபடத்தது!! நரம்புகளில் இரத்தோட்டம் நின்றதுபோல் ஒரு தோற்றம் - வெல வெலத்துப்போய் தொப்பெற்று உட்கார்ந்துகொண்டாள் கமலம்மாள்.

மறைந்துபோன ஒரு நினைவுச்சுடர்—முப்பத்தைந்து வருடங்களைப் பின்னோக்கி கொழுந்துவிட்டு எரிய வைத்தது—

அப்போ கமலம்மாளுக்கு வயது பதினெட்டு. தகப்பனில்லாப் பெண். தாய்க்குச் செல்வ மகள். பாடசாலையில் அவள் ஒரு சுதந்திரப் பறவை. கமலியென்று செல்லமாக அழைப்பார்கள் அவளுடைய தோழிகள்—பாடத்தில் அவள் சமர்த்து. விளையாட்டுகளில் அவளுக்கு முதலிடம். எல்லோருடனும் சாதுரியமாகப் பழகிக்கொள்வாள். துன்பமே தெரியாத நாட்கள். எல்லாம் சந்தோஷமாகவே காட்சி தரும் காலம். எப்போதும் சுறு சுறுப்பும் எல்லோரையும் சிரிக்க வைக்கும் குறும்புக் கதைகள் கிளிமொழிப் பேச்சு. கன்னிப் பருவக்களை முகத்தில் - கண்களில் கவரும் பார்வை. அழகிய உடற்கட்டு. நிறம்மட்டும் அவளுக்கு எதிராகப் போட்டி போட்டது. கறுப்பென்றால் என்ன? அதிலும் ஒரு தனி வசீகரம். அங்க அழகே நிறத்தை மறக்கச்செய்தது.

இந்த வேளையில்தான் தாயார் கண்மணியம்பாள் ஒரு விவாகப் பேச்சை அவளுடைய காதில் புகுத்தினாள், கலியாணத்தை நினைவில் எவயாத கமலிக்கு ஏதோ ஒரு மாற்றுணர்வு ஒரு புது உலகத்தில் சஞ்சரித்ததுபோல் கற்பனை.

பெண் பார்க்கும் படலமும் அடுத்த நாளாம். கமலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை' அவளும் பாடசாலையில் நாடகம் நடனம் என்று பங்கு பற்றி இருக்கிறாள்—அந்நாட்களில் அவளுக்குப் பயமோ சலனமோ ஏறபட்டதில்லை. ஆனால் இன்று ஒரு சிறு குழுவுக்கு முன்னால் அதுவும் அவள பிறந்து வளர்ந்ததன் ஆதிக்கத்திலிருக்கும் தன் சொந்த வீட்டில் பெண் பார்க்க வரப்போகிறார்கள் என்றதுமே அவள் மனதில் சலனம் ஏற்பட்டது; அவளுக்கு வியப்பாகவே இருந்தது.

எல்லாவற்றையும் சமாளித்துக்கொண்டு மறுநாள் தன் கையாலேயே சிற்றுண்டிகளைத் தயாரித்தாள். வீட்டை அழகுபடுத்தினாள். முற்றத்துப் பூக்கன்றுகளுக்கு தண்ணீரூற்றி ஆனந்த பரவசமூட்டினாள். வீட்டிலுள்ள அத்தனை சாமான்களிலும் புதுமை தோன்றியது.

அடுத்தவீட்டு ஜானகிக்கும் இவளுக்கும் ஒரே வயது. பால்ய சிநேகிதிகள். இரு வீட்டாரும் ஒரு வீட்டுக்காரர் போல் நடந்துகொள்வார்கள். கமலிக்கோ ஜானகிக்கோ அண்ணன்மார் இல்லாதது இரு குடும்பங்களுக்கும் ஒரு துர் அதிர்ஷ்டமாகும். ஜானகியை ஜனு என்று செல்லமாக அழைப்பார்கள். அன்று இரண்டு மணிக்கே ஜனு கமலியை அழகுபடுத்த வந்துவிட்டாள். இருவரும் கலகலப்பாகவே பேசிக்கொண்டார்கள்.

கண்மணியம்மாள் அங்கும் இங்குமாக நடந்து சிறுசிறு வேலைகளைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

மெல்லிய ரோஜா நிறச் சேலை - அதற்கேற்ற சட்டை. சுருண்ட மயிரில் நீளமான பின்னல் – பின்னலைச் சுற்றி மல்லிகை மலர்மாலை- பின்னலின் மேற்பாகத்தில் கொத்தான ரோஜா மலர் முத்து நகைகள் அவளுடைய காது, கழுத்து, கைகள் என்ற அங்கங்களை இறுகிருக அலங்கரித்தன. முகத்தில் லேசான பவுடர் பூச்சுடன் நெற்றியில் குங்குமம். இயற்கை அழகுத் தெய்வம் அவளுடன் சேர்ந்தாற்போல அழகு ஜொலித்துக்கொண்டிருந்தது.

"கமலியம்மா உன்னழகைக் காண என்ன அதிர்ஷ்டம் செய்திருக்கவேணுமடி இன்று வரும் வரன். நான் ஓர் ஆணாகப் பிறந்திருக்கக்கூடாதா உன் கரம்பிடிக்க என்று ஏங்கி நிற்கிறேனடி; -இந்நேரம் கம்பன் இல்லையே கவிபாட காவியம் எழுத" என்று முதுகை லேசாகத்தட்டிக்கொடுத்தாள் ஜனு.

"உன் வாயாடித்தனத்திற்கு இன்று ஒரு நாள் கிடைத்துவிட்டது-ஜனு! ஆடம்பரமே பிடிக்காத எனக்கு எப்படிப் பட்ட வரனோ?- எப்படி இருப்பாரோ? -பதுங்கும் புலியோ-பாயும் சிங்கமோ - எனக்குப் பிடிக்காவிட்டால் என்னடி செய்வது? ஜனுக்கண்ணு என் மனம் ஆனந்தப் பரவசத்தால் துள்ளவில்லையே. விதி விளையாடிவிடக்கூடாது. என்னடியம்மா சொல்கிறாய்" என்று அவளுடைய தோள்களைப் பிடித்தாள் கமலி.

மணி நாலு என்று மணிக்கூட்டின் முட்கள் காட்டின. அழகான கார் ஒன்று மாப்பிள்ளை வீட்டாருடன் வாசலில் வந்து நின்றது.

இவ்விவாகப் பேச்சை ஆரம்பித்த பெரியப்பாவும் அங்கு வந்திருந்தார். அவரும் கண்மணியம்மாளும் அவர்களை "வாருங்கள் வாருங்கள்" என்று புன்னகையோடு வரவேற்று உட்காரவைத்தார்கள். கண்மணியம்மாள் வரனைப் பார்த்ததும் பூரித்துப்போனாள். தன் மகளின் அதிர்ஷ்டத்தை மனதில் நினைத்துக்கொண்டாள்.

சிற்றுண்டி பரிமாறப்பட்டது. உபசரிப்புகள் முடிந்தன. தோகை மயிலான கமலி மெல்ல மெல்ல நடந்து அவர்கள் பக்கம் வந்தாள். மூவரும் அவளைப் பார்த்தார்கள். கமலியும் வரனைப் பார்த்தாள். அவர் முகத்தில் கனிவு நிறைந்த வியப்புச் சாயல் படர்ந்தது. தகப்பன் முகத்தில் சந்தோஷ வரவேற்புச்சாயலைக் கண்டாள். வரனின் தாயை புன்முறுவலுடன் பார்த்தாள். ஏதோ கலவரம் நிறைந்த வெறுப்புச் சாயல் படர முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள். கமலியின் செஞ்சம் துணுக்குற்றது.. தாயும் மகனும் ஏதோ குசுகுசுத்தார்கள்.

"என்ன இருந்தாலும் பெண் கறுப்பு எனக்குப் பிடிக்கலை" என்றாள் வரனின் தாயார்.

"கறுப்பென்றால் என்ன அம்மா? களையிருக்கிறது" என்றான் வரன்.

"அடக்கமான பெண்" என்றார் வரனின் தகப்பனார்.

"எனக்கு விருப்பமில்லாத கறுப்புப் பெண்ணை நீ கட்டி காலமெங்லாம் அழ நான் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. வேண்டாத மருமகளை என் வீட்டுக்கு அழைக்க நான் சம்மதியேன். இதுதான் என் முடிவு" என்று தாயார் பரபரப்புடன கூறினாள்.

"வேண்டாத மருமகள்" என்ற வார்த்தை கமலியின் காதில் மட்டுமல்ல கண்மணியம்மாளின் காதில் லேசாக விழுந்தது. கண்மணியம்மாளின் கனவுக்கோட்டை இடிந்து பொடியாகித் தரைமட்டமாகியது.

பெரியப்பா மாப்பிள்ளை வீட்டாரை வழியனுப்பினார். கண்மணியம்மாள் படுக்கையை நாடினாள். மறுநாள் அவளால் எழுந்திருக்கமுடியவில்லை. வைத்தியர்கள் பாரிசவாதம் என்றார்கள். ஓராண்டு ஓடிப்பறந்தது

கமலியை விரும்பிய கணவன் வந்தான் கைபிடிக்க. காலன் வந்தான் கண்மணியம்மாளின் உயிர் எடுக்க. இருவரும் அமைதியானார்கள்.

நாலு வருடங்கள நிம்மதியாக வாழ்க்கைச் சக்கரம் சுழன்றது. விதி அவளைச் சதி செய்தது.

சின்ன மகனையும் கமலம்மாளையும் தவிக்கவிட்டு சொர்க்கத்தில் அமைதிகொண்டான் அவன் கணவன்.

அந்த சின்னவனாகிய ராஜா தான் இன்று பெண்கொள்ளும் மாப்பிள்ளையாகி - தாய் சொல்லைத்தட்டாமல் கமலாம்மாளை உதறித்தள்ளிய சிங்கத்தின் முன் நிற்கிறான்.

—இவ்வெண்ண அலைகள் மோதி அமைதி நிலைக்கு வந்தது கமலம்மாளின் மனம்.

எல்லோரும் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார்கள். கமலம்மாள் தலை நிமிர்ந்துபெண்ணைப் பார்த்தாள்.

"என்னைக் கைவிடப்போகிறீர்களா? நான் தாயில்லாப் பெண்" என்று அவள் கண்கள் பேசின கமலம்மாளைப் பார்த்து.

கமலம்மாள் மகனைப் பார்த்தாள்.

"அம்மா கவலைப்படாதே, கலியாணநாளைக் குறியுங்கள்" என்றான் ராஜா.

(யாவும் கற்பனை)

கலா கனகசபை




## கிரிக்கட்துறையில்

# சாதனைகள் பல புரிந்த சதாசிவம்

க. பேரின்பநாயகம்
வீ. இ. இராஜமோகன்

இலங்கைக் கிரிக்கட் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய பெயர் சதாசிவம் என்பதாகும். 1940ம் ஆண்டிற்கும் 1950-ம்ஆண்டிற்கும் இடையே கிரிக்கட்துறையில் பிரகாசமான ஆட்டக்காரராகத் திகழ்ந்து துடுப்பாட்டங்களில் யாருமே இதுவரை மீறாத சாதனைகள் பல புரிந்த மகாதேவா சதாசிவம் தனது 60வது வயதில் கடந்த 9-ம் திகதி சனிக்கிழமை கொழும்பில் மாரடைப்பால் காலமானார். புகழ்பூத்த அவரது மறைவு இலங்கைக் கிரிக்கட் துறைக்கும், தமிழ்யூனியனுக்கும ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

திரு. மகாதேவா சதாசிவம் தனது 15-வது வயதில் கொழும்பு வெஸ்லிக்கல்லூரி கிரிக்கட்ஆட்டக்காரராக அறிமுகமானார். அக் கல்லூரிக்கெதிரான ஆட்டங்களில் சிறப்பாகத் துடுப்புஎடுத்து ஆடியதன் மூலம் பலரின் கவனத்தைக் கவர்ந்த இளைஞர் சதாசிவம் 1936ல் கல்கிசை சென்தோமஸ் கல்லூரிக்கு எதிராக விளையாடிய பொழுது "டபிள் செஞ்சரி" அடித்து சாதனைசெய்தார். கல்லூரியை விட்டதும் தமிழ் யூனியனில் கிரிக்கட் ஆட்டங்களில் கலந்துகொண்டார்.

### சகல நுணுக்கங்களும் அறிந்தவர்

துடுப்பு எடுத்து ஆடுவதில் சகல நுணுக்கங்களையும் புரிந்து வைத்திருந்த இவர் 1948ல் பிரபல்யமான அவுஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர் டொனல்ட் பிராட்மன் தலைமைதாங்கிய அவுஸ்திரேலிய குழுவுக்கு எதிரான போட்டிகளில் இலங்கை-மலேசிய கோஷ்டிகளுக்குத் தலைமை தாங்கிச் சிறப்புப் பெற்றவராவர்.

1945ல் விஜேமர்சன் தலைமைதாங்கிய இந்தியப் பிரபல முன்னணி ஆட்டக்காரர்களான வாவா அமர்நாத், விஜேஹசாரி, வினு

(9-ம் பக்கம் பார்க்க)

(முன் தொடர்ச்சி)

கலாயோகி ஆனந்த குமாரசுவாமியின் மூதாதையர்

# சென்னை நீதிமன்றத்தில் முத்துக்குமாரசாமி ஏற்படுத்திய ஒரு மாற்றம்!

ச. அம்பிகைபாகன் பி. ஏ.

முத்துக்குமாரசுவாமி பல்திறப்பட்ட ஆற்றல்கள் பொருந்தியவராக இருந்த போதிலும் அரசியலிலே அவருடைய ஆற்றல் முழுப் பிரகாசம் பெற்றது. அரசியலில் பிரவேசிப்பதற்கு இவருக்கு 1861-ம் ஆண்டு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இவருடைய மைத்துனர் எதிர்மனசிங்கம் தமிழர் பிரதிநிதியாகச் சட்டசபையிலிருந்த காலம் முடிவடைந்தது. இவரையே நியமிக்கும்படி மக்கள் கேட்டுக்கொண்டனர். அரசாங்கமும் இதற்குடன்பட்டு இவரைத் தமிழர் பிரதிநிதியாக நியமித்தது. இவர் சட்ட நிருபணசபைக்கு நியமிக்கப்பட்டதும் இவருடைய புகழ் இங்கிலாந்து தேசங்களுக்கெட்டியது. இதனால் அந்நாடுகளுக்கு வரும்படி அழைப்புக்கள் வந்தன. இவற்றை ஏற்று 1862-ம் ஆண்டில் இங்கிலாந்து சென்றதும் இவர் பரிஸ்டராக வர முயன்றார். இதற்கு முதலில் பல தடைகள் ஏற்பட்டன. அக்காலத்தில் பரிஸ்டராக வர விரும்பியவர்கள் கிறிஸ்தவர் அல்லாத யூதராகவிருக்கவேண்டும். இந்நிபந்தனையை முறியடித்து, எல்லாச் சமயத்தவரும் பரிஸ்டராக வர வழி வகுத்தவர் முத்துக்குமாரசுவாமியே. இவருக்கு பல பிரபுக்களின் நட்பிருந்தபடியால்தான் இதனைச் சாதிக்க முடிந்தது.

முத்துக்குமாரசுவாமி சென்னை நீதிமன்றத்தில் ஏற்படுத்திய ஒரு பெரும்மாற்றத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். 1867-ம் ஆண்டில் இவர் சென்னைக்குச் சென்றிருந்த பொழுது அங்குள்ள உயர் நீதிமன்றத்தில் அப்புக்காத்தாகச் சத்தியப்பிரமாணம் எடுக்க விரும்பினார். அப்பொழுது அங்கிருந்த நடைமுறைப்படி, அப்புக்காத்தாகச்சத்தியப்பிரமாணம் செய்யவிரும்புவோர் பைபிளைக்கொண்டு சத்தியம்செய்ய வேண்டியிருந்தது. இந்து சமயத்தவரான முத்துக்குமாரசுவாமி இப்படிச்செய்யவிரும்பவில்லை. கோட்டாருக்கு ஒரு கிறிஸ்தவரல்லாதவரைப் பைபிளைக்கொண்டு சத்தியப் பிரமாணம் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தல் முறையல்லவென்று வாதாடினார். மேலும் தாம் லண்டனில் பரிஸ்டராகச் சத்தியப் பிரமாணம் செய்தபொழுது பைபிளைக்கொண்டு சத்தியம் செய்யவில்லையெனச் சுட்டிக் காட்டினார். அப்பொழுது நீதிபதி அவ்விஷயத்தை உயர் நீதிபதிகள் எல்லோரும்கூடி (Full bench) தீர்க்கவேண்டுமென்றார். அப்படியே எல்லா நீதிபதிகளும் கூடி, முத்துக்குமாரசுவாமியின் கோரிக்கை நியாயமானதெனக் கண்டு, கிறிஸ்தவரல்லாதார் சாதாரணமாகச் சத்தியம்செய்தால் (Simple affirmation) போதுமெனத் தீர்மானித்தார்கள். முத்துக்குமாரசுவாமியும் அப்படியே செய்தார். இதனால் முத்துக்குமாரசுவாமி இந்துக்களின் சுயமரியாதையைக் காப்பாற்றினார்.

இவரது அப்பழுக்கற்றஉடையும் மேதாவிலாசமும் இனிமையான சுபாவமும் வழுவற்ற ஆங்கிலப்பேச்சும் பெரிய இடத்து நட்பையும் மதிப்பையும் இவருக்குத் தேடிக்கொடுத்தன. ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலைக்குச் சென்றபொழுது பெஞ்சமின்யொவெற் போன்ற மேதாவிகளைச் சந்தித்தார். பின்னால் பிரதமரான 'பார்மஸ்ரன்' போன்ற அரசியல் தலைவர்களின் நட்பையும்பெற்றார்.

இங்கிலாந்தில் தங்கியிருந்த காலத்தில் ''அதினீயம்'' போன்ற பிரபல்யமான சங்கங்களில் அங்கத்தவரானார். பிரிட்டனில் விஞ்ஞான வளர்ச்சிக்காகத் தாபிக்கப்பட்ட சங்கத்தின் ''(British association for the advancement of Science) ஆதரவில் 1863-ம் ஆண்டில் ''இலங்கை வாழ் இனங்கள்'' (Ethnology of Ceylon) என்னும் பொருள் பற்றி நீயூகாஸில் என்னுமிடத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இவரைப் பலருக்கு அறிமுகஞ்செய்ததோடு பலவிதமான உதவிகளைச் செய்தவர் பொங்கத்றன் மில்ன்ஸ் (Monckton Milns) என்பவராவர். இங்கிலாந்தில் இவர் கடுஞ்சுகவீனமுற்றபோது, இவரின் பராமரிப்பிலேதான் உயிர் பிழைத்தார். அரிச்சந்திர நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, விக்ரோறியா ராணிமுன் நடித்துக்காட்டியதும் இப்பிரயாணத்தின் போதே.

1865-ம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து இலங்கை திரும்பியதும் மறுபடியும் சட்ட நிருபணசபையில் அங்கத்தவராகி அரசியல் வாழ்வில் தீவிரமாக ஈடுபட்டார். சட்ட நிருபண சபையில் நடைபெறும் முக்கிய விவாதங்களில் எல்லாம் பங்குபற்றினார். ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுமுன் அதனை நன்காராய்ந்தபின்னரே பேசுவார். ஆயத்தஞ்செய்யாமல் பேசமாட்டார். இச்சிறந்த குணம் இவருடைய மருமகர் இராமநாதனிடமும் காணப்பட்டது. அரசாங்கம் இலங்கையில் கல்வியை நிர்வாகம்செய்வதற்கு ஓர் அதிகாரியை நியமித்த போது, அவர் ஏதேச்சாதிகாரமாக நடப்பதைத் தவிர்ப்பதற்கு ஓர் ஆலோசனைச் சபையை நிறுவுமாறு முத்துக்குமாரசுவாமிகேட்டார். ஆனால் அப்பொழுது அரசாங்கம் அதனை ஏற்கவில்லை. பின்னர் நெடுங்காலம் கல்விமான்களைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபை இருந்துவந்தது. இவருடைய முயற்சியினாலேயே 1865-ம் ஆண்டு ஒரு கல்வி விசாரணைச் சபை நிறுவப்பட்டது. இலங்கையில்விஞ்ஞானக் கல்வியின் வளர்ச்சிக்கு வழி வகுத்தவர் இவரே. இவரின் ஆலோசனைப்படியே கொழும்பு ரோயல் கல்லூரியில் விஞ்ஞான கூடம் நிறுவப்பட்டு விஞ்ஞான ஆசிரியரும் நியமிக்கப்பட்டார். கொழும்பு நூதனசாலை 1877-ம் ஆண்டில் தாபிப்பதற்கு இவர் அருஞ்சேவை புரிந்தார்.

அக்காலத்தில் இலங்கையின் அங்கிளிக்கன் சபை (Anglican church) நடத்துவதற்கு அரசாங்கம் பணம் உதவி வந்தது. முத்துக்குமாரசுவாமி இதனை வன்மையாகக்கண்டித்து சட்ட நிருபணசபையில் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதில் பௌத்தர், இந்துக்கள், முஸ்லிம்கள் முதலியோரிடமிருந்து பெறப்படும் வரிப் பணத்திலிருந்து கிறீஸ்தவ சபையை நடத்துவதற்கு பொருள் உதவி செய்வது ராஜதந்திரத்துக்கு முரணானது, அநீதியானது, கிறிஸ்தவ தர்மத்துக்கு மாறானதெனச் சுட்டிக்காட்டினார். இச்சொற்பொழிவைப்படித்த சுதேசிய நாட்டு மந்திரி, இச்சொற்பொழிவை நிகழ்த்தக்கூடியவரிருக்கும்நாடு, சுதந்திரம் பெறுவதற்குத் தகுதியுடையதெனக் கூறினாராம்.

முத்துக்குமாரசுவாமி மறுபடியும் 1874-ம் ஆண்டில் இங்கிலாந்திற்குச் சென்றார். அவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கு விக்ரோறியா ராணி சேர் பட்டம் வழங்கினார். இவ்வைபவத்துக்கு முத்துக்குமாரசுவாமியை முன்னாள் பிரித்தானிய முதன் மந்திரியான டிஸ்ரேலி அழைத்துச் சென்றார், டிஸ்ரேலி தாம் எழுதி முற்றுப்பெறாத நாவலில் முத்துக்குமாரசுவாமியை ஒரு பாத்திரமாக வைத்துள்ளாரெனக் கூறப்படுகின்றது.

இம்முறை இவர் இங்கிலாந்தில தங்கியிருந்தபொழுதுதான் இவருக்கு விவாகம் நடைபெற்றது. இவர் விவாகம்செய்த பெண் அழகிலும் அறிவாற்றலிலும் சிறந்து விளங்கியவர். இவருடைய பெயர் எலிசபெத் பீபி. இவருடைய குடும்பம் இந்தியாவோடு வியாபாரத்தொடர்பு கொண்டிருந்ததோடு இந்து சமயம், இந்து கலாச்சாரம் முதலியவற்றில் ஈடுபாடுடையவராயிருந்தனர். சேர் முத்துக்குமாரசுவாமி வண. மொன்சியர் கொன்வே என்பவரால் நடாத்தப்பட்ட மதப்பிரிவுகளைச் சாராத பிரார்த்தனை மண்டபத்தில் இந்திய தத்துவ சாத்திரத்தைப்பற்றிப் பல சொற்பொழிவுகள் ஆற்றினார். சுவாமி விவேகானந்தரின் அமெரிக்க, ஐரோப்பிய விஜயத்துக்கு ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்கு முன் சேர் முத்துக்குமாரசுவாமி லண்டனில் இந்திய தத்துவ சாத்திரம் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. இச் சொற்பொழிவுகளுக்குச்சென்றிருந்தபோதே எலிசபெத் பீபி, சேர் முத்துக்குமாரசுவாமியைச் சந்தித்தார். அப்பொழுது எலிசபெத் பீபிக்கு வயது 23. சேர் முத்துக்குமாரசுவாமிக்கு வயது 40. இவர்களின் விவாகம் 1875-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் திகதி பன்கிறியாஸ் என்னுமிடத்தில் செய்யப்பட்டது. இதற்கு அக்காலத்தில் கேம்பிறிட்ச் சர்வகலாசாலையில் படித்த இவரின் மருமகர் அருணாசலம் சாட்சியாகக் கையொப்பமிட்டுள்ளார். இவ்விவாகத்தினாலும் இவரது பேச்சுக்களினாலும் எழுத்துக்களினாலும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட கீழைத்தேச மேலைத்தேச உறவு இவரது மகன் கலாயோகியினால் உறுதிப்படுத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

விவாகஞ்செய்து இலங்கை திரும்பியதும் சேர் முத்துக்குமாரசுவாமிக்கும் அவரது பாரியாருக்கும் ஒரு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. இவ்வரவேற்பில் ஒரு தங்கப்பேழையும் சங்கிலியும் இவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. கொழும்பில் கொள்ளுப்பிட்டியிலுள்ள 'றயின்லண்ட்' என்னும் இல்லத்தில் சிறந்த இல்வாழ்க்கை நடாத்தினர்.

இவ்வில்லத்தில்தான் இவருடைய ஒரேஒரு குழந்தையான அனந்தா கென்ரிஷ் குமாரசுவாமி பிற்காலத்தில் உலகப் புகழ்பெற்றவர் தோன்றினார். பிள்ளையின் நாமத்தில் மூன்று பெயர்கள் இருப்பதைக் காணலாம். கடைசியிலுள்ள குமாரசுவாமி தகப்பனாரின் குடும்பப் பெயராகக் கொள்ளலாம். நடுவிலுள்ள 'கொன்ரிஷ்' என்பது தாயின் தொடர்பைக் குறிக்கும். தாய் பிரிட்டனிலுள்ள 'கொன்ற்' பகுதியில் தோன்றியவர். 'ஆனந்த' என்பதுதான் சிறப்புப்பெயராகக் கொள்ளலாம். ''ஆனந்த' என்பது புத்தரின் பிரதம சீடரின் பெயரைக் குறிக்கும் என்பர். ஆனால் 'ஆனந்த' என்பது இந்துக்களாலும் கொள்ளப்படும் பெயராகும்.

இங்கிலாந்தில் சேர் முத்துக்குமாரசுவாமி ஈட்டிய புகழைக் கேள்விப்பட்ட, பதவி நீக்கம் செய்யப்பட்ட தஞ்சாவூர் மகாராணி தமக்கும் தமது பேரனுக்கும் இழந்த பதவியைப் பெற்றுத்தரும்படி இவரை வேண்டினர். தஞ்சாவூர் மகாராசா தமக்கு ஆண் மகவில்லாதபடியால் தமது பேரனைத் தமது வாரிசாக நியமித்திருந்தார். டல்கவுசி காலத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி ஒரு தேச மன்னர் ஆண்மகவில்லாமல் இறந்துவிட்டால், அவருடைய ராச்சியத்தை ஆங்கில அரசு எடுத்துக் கொள்ளலாம். தஞ்சாவூர் மகாராணியும் பேரனும் இச்சட்டத்தின்கீழ்தான் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இராணியின் தூதுவராகச் சேர் முத்துக்குமாரசுவாமியிடம் வந்தவர் இலக்கணம் இராமசாமிப்பிள்ளையாவர், இவர் இராமநாதனின் மருமகர் கலாநிதி சு. நடேசபிள்ளையின் கொள்ளுப்பாட்டனுவர். இவரே பிற்காலத்தில் அருள்பரானந்த சுவாமிகள் என்னும் நாமத்தோடு சிறந்த ஞானியாக விளங்கியவர். இவர்தான் சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்கும் அவர் தம்பி அருணாசலத்துக்கும் ஞானகுருவாய் அமைந்து, அவர்களை மேனாட்டு நாகரிகத்திலிருந்து மீட்டு சமயத் துறையில் அரிய சாதனைகள் புரிய வழிவகுத்தவர்.

சேர் முத்துக்குமாரசுவாமி மகாராணியின் சார்பில் எவ்வளவோ பிரையாசையெடுத்தும் மகாராணியின் குடும்பத்தினருக்குள் எற்பட்ட பிணக்குகள் காரணமாக அவர்களுக்கு இழந்த பதவியை எடுத்துக் கொடுக்கமுடியவில்லை. ஆனால் அவர்களுக்கு பென்சன் முதலிய பல சலுகைகளைப் பெற்றுக்கொடுத்தார். இவர்செய்த உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இவருக்கு யானைத்தந்தத்தினாலும் பொன்னாலும் செய்யப்பட்ட ஒரு நடராச திருவுருவத்தை மகாராணி அன்பளிப்பாகவழங்கினார்.

இக்கட்டத்தில் ஆறுமுக நாவலருக்கும் சேர் முத்துக்குமாரசுவாமிக்கும் இருந்த தொடர்பை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் ஆற்றிவந்த சேவைகளை சேர் முத்துக்குமாரசுவாமி நன்கறிந்திருந்தார். முன்பு நான் குறிப்பிட்ட கிறிஸ்தவ சபைக்கு அரசாங்கம் பணஉதவி செய்துவருவதைப் பற்றிய விவாதத்தில் நாவலரைப் பற்றி சேர் முத்துக்குமாரசுவாமி பின்வருமாறு கூறினார். ''இந்துக்களில் சிறந்தஇந்துவாக விளங்

(9-ம் பக்கம் பார்க்க)

நிகாடோ பப்படம்

தரத்தில் சிறந்தது, சுவையில் மணத்தில் நிகரற்றது
100 க்கு 70% வீதம் திறமான உழுந்தில் தயாரிக்கப்பட்டது

நிகாடோ பப்படம்

கல்யாண மண்டபங்கள், விருந்துகள், ஹோட்டல்கள் போஜனசாலைகள் முதலிய இடங்களில் பரிமாறும் அறுசுவைப் பதார்த்தங்களுக்கு சிகரம்போல் விளங்குவது

எங்கள் சுத்தமான, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

நிகாடோ பப்படம்

இன்றே வாங்கி இன்புறுங்கள்.
மற்றும் எங்கள் போஷாக்குத் தயாரிப்புகள்

- ★ நியு நிகாடோ அம்மாமி பப்படம்
- ★ மங்கல பப்படம்
- ★ நிகாடோ மோர் மிளகாய்
- ★ நிகாடோ விஞகிரி
- ★ நிகாடோ தக்காளி சோஸ்
- ★ நிகாடோ மிளகாய் சோஸ்

முதலியன

நிகாடோ பப்படம்
றிஜிஸ்டர் இல; 37174

நிகாடோ அம்மாமி பப்படம்
றிஜிஸ்டர் இல: 37175

நிகாடோ டிரேடிங் கம்பெனி
647, பண்டாரவத்தை
கடவத்தை
தொலைபேசி; 0783—285

மேடை வானொலி நாடகத்துறையில் அனுபவமிக்கவரும் 'புளுகர் பொன்னையா' போன்ற நகைச்சுவை நாடகங்கள் மூலம் மக்கள் மனதைக் கவர்ந்தவருமான வரணியூரான் (எஸ். எஸ். கணேசபிள்ளை) இக் கட்டுரைத் தொடரை எழுதுகின்றார்.

# வானொலி நாடகம் எழுதுவது எப்படி?

வரணியூரான்

## முன்னுரை

இன்று ஈழத் திருநாட்டிலே தரமான எழுத்தாளர்கள் ஏராளம் பேர் இருக்கின்றனர். பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தனி நூல்களும் ஏராளம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஒரு புது எழுச்சி தோன்றி அதன் பலனுக பல கருத்தரங்குகளும் அவ்வப்போது இடம்பெற்றுவருகின்றன. கதை, கவிதை, கட்டுரைகள் என்பனவற்றை எழுத்தாளர்கள் கணக்கின்றி பிரசவித்துக்கொண்டிருக்கின்றனர்.

கவனிப்பாரற்றுக் கிடந்த நாட்டுக்கூத்துக்கள், மரபு நாடகங்கள் ஆகியனவும் மீண்டும் புத்துயிர் பெற்று ஆங்காங்கே ஆடப்பெற்று வருகின்றன. அவ்வாறே நாடகத்துறையிலும் நல்ல முன்னேற்றம் காணப்பட்டு வருகின்றது. கொழும்பிலே வாரந்தோறும் ஒரேநாளில் பல நாடகங்கள் கூட) தமிழ் நாடகங்கள் மேடையேறுவதைப் பார்த்து நாம் பெருமைப்படாமலிருக்க முடியாது. இது ஒரு நல்ல சகுனம்.

ஆனல்...

நாடகக் கலையை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் வானொலிக்கு நாடகங்கள் எழுதுபவர்கள் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றனர். கடந்த 1956ம் ஆண்டில் பதினறு வருடங்களாக எனக்கும் ஏதோ ஒரு வகையில் வானொலி நிலையத்துடன் இருந்து வரும் தொடர்பைக் கொண்டே இதை நான் கூறுகிறேன்.

நல்ல வானொலி நாடகப் பிரதிகள் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கின்றது என்று அவர்களே பல சந்தர்ப்பங்களில் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இதற்கென நாடகப்போட்டிகள், நாடகப் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் என்றெல்லாம் பலவகைகளில் வானொலி நிலையத்தினர் நடவடிக்கைகள் எடுத்தும் எதிர்பார்த்த பலன் கிட்டியதாகத் தெரியவில்லை.

விளைவு...?

ஒரே எழுத்தாளர்களின் படைப்புக்களையே ஒலிபரப்பவேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஒலிபரப்பாகும் வானொலி நாடகங்களை தொடர்ந்து உன்னிப்பாகக் கவனிப்போருக்கு இந்த உண்மை புலனுகும். இதற்கு வானொலிநிலையத்தினரைக் குறைகூறுவதில் அர்த்தமில்லை.

ஒலிபரப்பாகும் நாடகங்களுக்கு தரத்திற்கேற்ப நிமிடத்துக்கு இரண்டு ரூபாவிலிருந்து 7 ரூபா வரையில் சன்மானம் அளிப்பதற்கு வசதியிருப்பதாக நிலையத்தினர் தெரிவிக்கின்றனர். இது பெரிய சன்மானம் அல்ல என்பதை நாம் ஏற்றுக்கொண்டாலும், சாதாரணமாக பத்திரிகைகளில் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதிப்பெறும் சன்மானத்தைவிட அதிகம் என்றே சொல்லலாம். அப்படியிருந்தும் ஏன் எழுத்தாளர்கள் எழுதுகிறார்களில்லை.

இதுதான் முக்கியமான பிரச்னை.

எழுதுகிறார்கள்!

நிறையப்பேர் எழுதுகிருர்கள்!

ஆனல் தரமான நாடகப் பிரதிகள் தாம் கிடைப்பதில்லையாம். இதற்குக் காரணம் என்ன? இதே கேள்வியை நான் எனக்குள்ளே எழுப்பினேன். அதன்விளைவுதான் இந்தக் கட்டுரை உருவாகியது.

வானொலி நாடகங்கள் எழுதும்முறை பலருக்குத் தெளிவாகத் தெரியாததேயாகும். பல சிறந்த எழுத்தாளர்கூட இந்தத்துறையில் ஈடுபடாததற்கு முக்கிய காரணம் இதுதான் என்பது எனது முடிவு. வானொலிநாடகங்கள் எழுதும் முறை தெரியாமல் இருப்பின் தரமான நாடகங்கள் அமையமுடியாது. ஆகவேதான் இந்தத்துறையில் ஈடுபடவிரும்பும் ஆரம்ப எழுத்தாளர்களுக்கு உதவுமுகமாகவே எனது அனுபவத்தைக் கொண்டு இச் சிறு கட்டுரைகளை எழுத முன்வந்தேன்.

இது ஒரு முழுமையான விபரங்களடங்கிய கட்டுரை என்று கூறமுடியாவிட்டாலும், ஆரம்ப எழுத்தாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இருக்க வேண்டுமென்பதே என் அவா.

எழுதும் முறைகளோடு மாத்திரம் நிற்காமல் மாதிரிக்காக ஒலிபரப்பாகிய இரண்டு நாடகங்களையும் சேர்த்துள்ளேன்.

இக் கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள், இதுமிகவும் உபயோகமான கட்டுரை என்றுபோற்றினுல், இதனுல் பயன் கிடைக்கும் என்று உணர்ந்தால் என்னுடைய நோக்கம் நிறைவேறியதாகவே ஆகும். அனைவருக்கும் புலனுகும்விதத்தில், கடுஞ்சொற்றொடர்களைத் தவிர்த்து மிகச் சாதாரண சுலபமான தமிழில் எழுதியுள்ளேன். இதிலுள்ள குறைநிறைகளைச் சுட்டிக்காட்டித் தத்தம் கருத்துக்களை அன்பர்கள் எனக்கெழுதினுல் அடுத்த கட்டுரைகளில் அவற்றைத் திருத்த - சேர்த்துக்கொள்ள வசதியாக இருக்கும்.

### வானொலி நாடகம் என்ருல் என்ன?

ஒலி மூலம் கேட்பவர்களுக்கு ஒரு கதையைச் சொல்வதே வானொலி நாடகமாகும். ஒன்று சொல்லும் பொழுது அது குரல் மூலமாகவோ, ஒலிக்குறிப்புக்கள் (Sound Effects) மூலமாகவோ இசைக் கருவிகள் மூலமாகவோ இருக்கலாம்.

மேடையிலே காண்பிக்க முடியாத பல காட்சிகளை ஒலி மூலம் கேட்பவர்களுக்கு உணர்த்தக்கூடிய பெரும் வாய்ப்பு வானொலி நாடகங்களுக்கு உண்டு அதே சமயம் மேடையில் மட்டும் காண்பிக்கக்கூடிய சில அம்சங்களைத் தத்ரூபமாக வானொலி மூலம் உணர்த்துவது கஷ்டமே.

உதாரணத்துக்கு சரித்திர நாடகமொன்றில் ஒரு யுத்தக் காட்சி இடம்பெறவேண்டுமென்று வைத்துக்கொள்வோம். பல்லாயிரக்கணக்கான போர் வீரர்கள், யானைப் படை, குதிரைப்படை, தேர்ப்படை, மரண ஓலங்கள் இவையெல்லாவற்றையும் நாம் மேடையிலே காண்பிப்பது கடினமல்லவா? ஆனுல் சில ஒலிக்குறிப்புக்களைக்கொண்டும் இசைக் கருவிகளின் துணை கொண்டும் சில வினுடிகளில் பயங்கர யுத்தம் நடப்பதை வானொலி மூலம் கேட்பவர்களுக்கு உணர்த்திவிடலாம்.

இதே போன்று சில அங்க அசைவுகள் மூலம் மட்டும் புலப்படுத்தக்கூடிய சில காட்சிகளை வானொலி நாடகங்கள் மூலம் உணர்த்துவது கஷ்டமே. இவையே மேடை நாடகத்துக்கும்வானொலி நாடகத்துக்கும் உள்ள வேறுபாடு என்று கொண்டாலும் பொருந்தும்.

### வானொலியுடன் எந்த விதமான தொடர்பும், அனுபவமும் இல்லாதவர்கள் கூட சிறந்த

### வானொலி நாடகங்களை எழுத முடியுமா?

இந்த நூலைப் படிப்பதன் மூலம் நிச்சயமாக முடியும் என்று துணிந்து சொல்வேன். எவன் ஒருவன் முதன் முதலாக எந்தவொரு விஷயத்திலாவது ஈடுபடுகிருனே அவனுக்கு அதற்கு முன்பு வந்த அனுபவம் நிச்சயமாக இருந்திருக்க முடியாதல்லவா? முதன் முதல் வானொலி நாடகம் எழுதிய எவருக்காவது அனுபவம் இருந்திருக்கமுடியாது. ஆனல் அதுபற்றிய அறிவு இருந்திருக்கலாம். வானொலி நாடகம் ஒன்று எழுதுவதற்குரிய ஆரம்ப அறிவு (Fundamental Knowledge) மட்டும் இருந்தால் எவரும இலகுவில் எழுதிவிடலாம். சிறிது கற்பனை வளம் உள்ளவர்கள் மிகச் சிறந்த படைப்புக்களைக்கூட உருவாக்க முடியும்.

### ஆரம்ப அறிவு என்ருல் என்ன?

இதுதான் முக்கியமான அம்சம். நடனம், சங்கீதம், நாடகம் போன்ற எல்லாவற்றிற்குமே சில விதிமுறைகளுண்டு. அதுபோலவே வானொலி நாடகம் எழுதுவதற்கும் விதிகளிருக்கின்றன. சாதாரணமாக நாடகங்கள் (நடிப்பதற்கோ, படிப்பதற்கோ) எழுதும் போதும் சில பொது விதிகளைக் கடைப்பிடிக்கவேண்டியிருக்கும். இது வானொலி நாடகத்துக்கும் பொருந்துமெனினும், வானொலி நாடகங்களை எழுதும் பொழுது சில விசேஷ விதிகளைக் கவனிக்கவேண்டும். முதலில் நாடகங்கள் எப்படி எழுதவேண்டும். என்பதைப் பார்ப்போம். எல்லா நாடகங்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டிய சில தன்மைகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

நாடக விமர்சன சம்பிரதாயத்தின்படி மூன்று பண்புகள் ஒரு நாடகத்தில் இருக்கவேண்டும் என்பார்கள் அவையாவன;

1. Entertainment (சுவையான பொழுது போக்கு.)
2. Enlightenment (அறிவூட்டும் தன்மை.)
3. Exaltation (உள்ளத்தை உயர் நிலைக்கேற்றிப் பரவசமூட்டல்.)

இவை பொதுவாக எல்லா நாடகங்களிலும் இருக்கவேண்டியது அவசியம்.

இதுதவிர எல்லா நாடகங்களுக்கும் ஓர் அடிப்படை விதி உண்டு. அதாவது நாடகக் கதை ஏதாவது ஒரு பிணக்கை, மோதுதலை அல்லது போராட்டத்தை (Conflict) உணர்த்த வேண்டுமென்பது. இந்தப் போராட்டச் சம்பவங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுவதோடு அதற்குப் பின்னணியிலுள்ள மன உந்தல்களும் நாடகத்தில் புலப்படுத்தப்பட வேண்டும்.



மிகவும் பழைமைவாய்ந்த (சுமார் இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாடக இலக்கியத்தை ஆராய்ந்து நாடகத்தின் தன்மைகள் இவை என்று வகுத்துக் கூறிய அரிஸ்ரோற்றில் (Aristotle) என்பார் நாடகத்துக்கு இரண்டு பகுதிகள் அவசியம் என்று குறிப்பிட்டிருக்கிருர். அதாவது சிக்கலை ஏற்படுத்தும் முற்பகுதி, சிக்கல் தீரும் பிற்பகுதி என்ற இரண்டுமே.

இதே விதியைப் பின்னுல் வியாக்கியானம் செய்த நாடகத்துறை அறிஞர்கள் நாடக அமைப்பில் ஐந்து பகுதிகள் இடம்பெற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிருர்கள்.

அவையாவன:

1. பொருளை விரித்தல் (Exposition.)
2. சிக்கலை உண்டாக்கள் (Complication.)
3. உச்சக்கட்டத்துக்குக் (Climax.)
4. சிக்கல் தீரத்தொடங்குதல் (The Resolution or Denouement.)
4. சிக்கல் முற்ருகத்திருதல், முடிவு (Conclution or Cotastophe)

### பொருளை விரித்தல்

இந்த முதற் பகுதியில் ஏற்கெனவே நடந்து முடிந்துவிட்ட சம்பவங்கள் பற்றியும், கதாபாத்திரங்கள் யார் யார் என்பன போன்ற விபரங்களும் இடம்பெறும்.

### சிக்கலை உண்டாக்கல்

இந்தப் பகுதியில் தான் நாடகத்தின் முக்கியமான சம்பவம் நிகழும்.

### உச்சக்கட்டத்துக்குக் கொண்டுவரல்

இந்தப் பகுதியிலே சிக்கலை உண்டாக்கும் நிகழ்ச்சி மேலும் இறுகி வலுப்பெற்று இந்தச் சிக்கல் தீராதோ என்ற அடிப்படையும், தீரவேண்டுமே என்ற அங்கலாய்ப்பையும் ஏற்படுத்த வேண்டும்.

### சிக்கல் தீரத் தொடங்குதல்

இங்கே ஏற்படுத்திய சிக்கல் சிறிது சிறிதாக அல்லது திடீரென அவிழத்தொடங்க வேண்டும்.

### சிக்கல் முற்ருகத் திருதல், முடிவு

இந்தக் கடைசிப் பகுதியில் பிரச்னைகள் முற்ருகத் தீர்ந்து சரிநிலையை ஏற்படுத்தி முற்றுப் பெறுதல்.

இங்கே குறிப்பிட்ட பொது விதிகள் எல்லா நாடகங்களுக்கும் பொருந்துமாதலால், இவ்விதிகளைப் பின்பற்றி அமைக்கும் நாடகங்கள் சிறப்பாக இருக்குமென்பதில் ஐயமில்லை. வானொலி நாடகங்களுக்கும் இவ்விதிகள் விலக்கல்ல. வானொலி நாடகங்கள் எழுதுமுன் சிறந்த கதையைத் தேர்ந்தெடுப்பது அவசியம்.

### சிறந்த கதைதான் வானொலிநாடகத்துக்கு முக்கியமான அம்சமா?

பொதுவாக நாடகமென்றுலே கதைதான் முக்கியமென்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. குறிப்பாக வானொலி நாடகத்திற்கு இது மிகவும் இன்றியமையாதது என்பதே எனது கருத்து. புராணக் கதையாக இருப்பினும் சரி. இலக்கிய, வரலாற்று நாடகங்களாயினும் சரி அல்லது சமூகப் புனைகதையாக இருந்தாலும் சரி சிறந்த கதையம்சம் கொண்டதாக இருந்தால்தான் வானொலி நாடகம் சிறப்பாக இருக்கும் கதை கேட்பவர்களைக் கவர்ந்து ஈர்க்கும் தன்மை வாய்ந்ததாகவும், அடுத்து என்ன நிகழப்போகிறது என்ற ஆர்வத்தைத் தூண்டும் விதமாகவும் இருக்க வேண்டும். முன்னர் குறிப்பிட்ட நாடக விதிகளுக்கு அமையவும் இருக்க வேண்டும். இத்தனை விபரங்களையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த கதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். இதை வானொலி நாடகமாக அமைப்பது எப்படி?

(தொடரும்)

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

# ஓர் இலட்சிய புருஷரின் ஓர் இலட்சிய மனைவி

**உலகத்துக்குத் தன்னை அர்ப்பணித்துவிட்ட ஓர் இலட்சிய புருஷரின் மனைவி எப்படி விளங்க வேண்டும். அதற்கு எடுத்துக் காட்டு அன்னை கஸ்தூரிபா காந்தி**

பொது நலத் தொண்டுக்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்ட காந்திஜி. தம் சொந்தக் குடும்பத்தின் முன்னேற்றத்தில் அக்கறையோ ஆர்வமோ காட்டக்கூடாது என்று கண்டிப்பாக இருந்தார். ஆனால் கஸ்தூரிபாவினால் அப்படியிருக்க முடியவில்லை. ஊருக்கு உழைக்கும் உத்தமருக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டோம் அவருக்குப் பணிவிடைகள் செய்வதன் மூலம் தான் பிறவிப்பயனைப் பெற வேண்டும் என ஆசைப்பட்டாள்.

கணவனுக்குப் பணிவிடை செய்துவிட்டால் போதுமா? கணவன் அன்புசெலுத்துகிற அத்தனை பேருக்கும் சேவை செய்யவேண்டியது தானே மனைவியின் கடமை. எனவே அவரும் தன்னாலியன்றதைமக்களுக்குச்செய்யவேண்டும் என மனதில் ஒரு திடமான உறுதியை உருவாக்கிக்கொண்டார். காந்திஜிக்கு பொறுமை அதிகம். விடாமுயற்சியும் பிடிவாதமும் மிக மிக அதிகம். ஆகவே அவர் எளிதில் ராட்டையில் நூல் நூற்கக் கற்றுக்கொண்டுவிட்டார் அவருக்குத் தெரிந்தது மனைவிக்குத் தெரிந்தாகவேண்டும். ஆகவே கஸ்தூரிபாவிடம் ஒரு ராட்டையைக் கொடுத்து அதை நூற்றுக்கும் முறையை சொல்லிக்கொடுக்க உட்கார்ந்துவிட்டார். கஸ்தூரிபா நூற்றுக்கொண்டே இருப்பார். அவருக்கு இழை சீராக வராது இடையில் அறுந்து போய்விடும், அலுத்துக்கொள்வார்.

ஒரு வாரம் சென்றது. ஒரு நாள் மாலை குடிசைக்குமுன் அமர்ந்து கஸ்தூரிபா நூற்றுக்கொண்டிருந்தார். அதைப் பார்த்தபடியே காந்திஜி அவர் அருகில் உட்காந்துகொண்டிருந்தார். தேவலையே கஸ்தூரி ஒரு வாரத்தில் நிறையக் கற்றுக்கொண்டாயே என்றார். இரண்டடி நூல் கூடச்சீராக வரமாட்டேன் என்கிறதே. நடுவில் அறுந்துபோனால் எனக்கு எரிச்சலாக இருக்கிறது என்றார் கஸ்தூரிபா.

**பி. ராதா**

இதோ பார் கஸ்தூரி வாழ்க்கையைச் சீராக அமைத்துக்கொள்ள நமக்கு எத்தனை பொறுமை இருக்கவேண்டுமோ அத்தனை பொறுமை ராட்டையால் ஒழுங்காக நூற்பதற்கும் வேண்டும். வாழ்க்கை என்ற சக்காவில் 'மனநிம்மதி, என்ற நூலை நாம் நூற்றாக வேண்டும். ஆனால் அது அடிக்கடி அறுந்துதான் போகும். எல்லாமே நாம் விரும்புவது போல் நடக்காது. எதிர்பாராதநிகழ்ச்சிகளும் சங்கடங்களும் அவ்வப்போது தோன்றத்தான் செய்யும். அதற்காக மனமுடைந்து உட்கார்ந்து விடக்கூடாது. நூற்கும் போது அறுபட்ட இரு முனைகளையும் இணைத்து இழையை தொடர்வது போல் உடைபட்ட உள்ளத்தை ஒட்டவைத்துக் கொண்டு வாழ்க்கையைத் தொடரவேண்டும்.

இப்படிப்பழகப் பழகத்தான் துயரம் மிக்க சூழ்நிலையிலும் நிம்மதி நிறைந்த வாழ்க்கை நூலை நாம் நூற்கமுடியும் என்ற வேதாந்தத்தையே பிழிந்து தந்து விட்டார் காந்திஜி.

## ஏன் இத்தனை அவசரம்?

இப்படியாக ஒரு நாள் மாலை அபூர்வமாக காந்திஜியும் கஸ்தூரிபாவும் உலவப்போய்க் கொண்டிருந்தார்கள். வழியில் இருந்த ஒரு சிறு கல் அவர் காலில் இடறி கட்டை விரலைக் குத்திக் காயமாக்கிவிட்டது. உடனே இரத்தம் கொட்ட ஆரம்பித்தது. அப்படியே கீழே உட்கார்ந்துவிட்டார் காந்திஜீ. கஸ்தூரி சீக்கிரம் ஒரு துணியை எடுத்துக்கொண்டு வா. காயத்தைச் சுற்றிக் கட்டு பேசாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாயே போ என்று அவசரப்படுத்தினார். அவர் துடிப்பையும் படபடப்பையும் கண்ட கஸ்தூரிபா தனக்குள் சிரித்துக்கொண்டார்.

ஒரு துணியைக் கிழித்து அவர் காலில் கட்டிக்கொண்டே என்ன இந்தச் சாதாரண காயத்திற்கு இத்தனை அமர்க்களம் செய்கிறீர்கள். உயிரைப் பற்றியே எனக்குக் கவலையில்லை. மரணத்துக்குப் பயப்படமாட்டேன் என்று வீராப்புப் பேசுவீர்களே ஒரு துளி இரத்தத்தைக் கண்டதும் அலறிவிட்டீர்களே! என்று சற்று ஏளனமாகவே கேட்டார். நான் உயிருக்குப் பயப்படவில்லை கஸ்தூரி இந்த உடல் நாட்டுக்குச் சொந்தம். இந்தச் சிறு காயத்தைக் கவனிக்காமல் அலட்சியமாக இருந்துவிட்டால் அது பெரிதாகிவிடும். பிறகு என்னால் நடக்கமுடியாமல் போய்விட்டால் என்னை நம்பியிருக்கிறவர்கள் கதி என்னாவது அதற்காகத்தான் நான் அவசரப்படுத்தினேன் என பதில் அளித்தார் காந்திஜி. கணவனுடைய உயிரும் உடலும் நாட்டின் உடைமை அவற்றைக் காப்பாற்ற வேண்டியது தன் கடமை என்பதை நன்றாக உணர்ந்துகொண்டார் கஸ்தூரிபா.

இப்படியாக இவர்கள் வாழ்க்கை மெல்ல சபர்மதி ஆச்சிரமத்தில் தெள்ளிய நீரோடை போல் ஓடிக்கொண்டிருந்தது. அங்கு வரும் அரசியல் தலைவர்களோ வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களோ காந்திஜியைக் கண்டு இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுப் போவோம் என வருபவர்களோ யாராயிருந்தாலும் கஸ்தூரிபாவை சந்திக்காமல் போகமாட்டார்கள். அப்படிப் போக நேர்ந்தால் தங்களுடைய வருகை முழுமை பெற்றதாகக் கருதமாட்டார்கள்.

## நேருவிடம் தனிப்பாசம்

நாட்டின் தலைவர்கள் வந்து காந்திஜியுடன் முக்கியமான பிரச்னைகளைப்பற்றி தீவிரமாக விவாதித்துவிட்டுப் பிரியும் போது கஸ்தூரிபா இருக்கும் இடம் தேடிவந்து இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுத் தான் போவார்கள். மோதிலால் நேரு, ஆண்ட்ரூஸ், ராஜாஜி. மௌலானா ஆஸாத், வல்லபாய் பட்டேல், ராஜேந்திர பிரசாத் அத்தனை பேரும் பாவின் குடிசைக்கு வந்து நலன் விசாரித்துவிட்டு காப்பியோ டீயோ வாங்கி குடித்துவிட்டுத்தான் போவார்கள். தன் கணவருடன் எதைப் பற்றி பேசுகிறார்கள் என்று அவருக்குத் தெரியாவிட்டாலும் அவர்களெல்லோரும் தங் இருவரிடமும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள் என்று கஸ்தூரிபாவுக்கு மிகத் தெளிவாகப் புரிந்தது.

இவர்கள் எல்லோரையும் விட நேருதான் வயதில் இளைஞர். அவரிடம் கஸ்தூரிபாவுக்கு ஒரு தனி அன்பும் பாசமும் உண்டு. ராஜாவைப் போல் சுக வாழ்வு வாழவேண்டியவர் தன் கணவர் சொல்லைக்கேட்டு மக்களின் வறுமையைப் போக்க தியாக வாழ்வை மேற்கொண்டதைப்பற்றி அடிக்கடி நினைத்துப் பெருமிதம்கொள்வார். நேருஜியும் கஸ்தூரிபாவைத் தன்தாயைப் போலவே கருதினார். அவரிடம் வந்து குழந்தைபோல விளையாடுவார்.

இப்படியாக காலவேகம் நான்கு ஆண்டுகள் வேகமாக புரண்டோடியது. நாட்டின் வரலாற்றில் வீரகாவியங்கள் வரையப்பட்ட வருடம். தியாகத் தழும்பேறிய பாரதச் செம்மல்கள் சுதந்திரப் பெருங் கோயிலின் தலைவாசற்படியால் தவம் கிடந்த நாட்கள், அடிமைக் கனலில் இழகிய நெஞ்சங்கள் அண்ணல் காந்திஜியின் தண்மதி ஒளியில் அஞ்சாமல் தோளோடு தோள் நின்று தேசப்பணிக்கு தம்மை அர்ப்பணித்துக்கொண்ட வருடங்கள் வரலாறுகாணாத ''வரிகொடா'' இயக்கமும் உலகமுமே கண்டறியாத ',உப்புச் சத்தியாக்கிரகமும்'' நடைபெற்ற பொற்காலம் அது. அந்தப் புனிதப்போரில் கலந்துகொண்டவர்கள் புண்ணியம் பெற்றவர்கள். அதில் மடிந்தவர்கள் வீர சுவர்க்கம் எய்திய தியாகச் சுடர்கள், அந்நாட்களில் வாழக்கொடுத்துவைத்தவர்கள்வணக்கத்துக்குரியமேன் மக்கள். அன்பு மனைவியாக, வீரத்தாயாக வாழ்ந்த அன்னை கஸ்தூரிபா தளபதியின் துணைவியாக, நாட்டின் தலைவியாக, வீராங்கனையாக வளர்ந்ததும் அந்த நான்கு ஆண்டுகளில்தான். வீட்டிலே முடங்கிக் கிடந்த தாய்க்குலத்தை தாய் நாட்டின் மானம் காக்கும் வீராங்கனைகளாக மாற்றி அண்ணலுக்கு முதல்தொண்டராக விளங்கினார் அவர். தண்டி கடற்கரைக்கு நடந்துசென்று தம்கையால் உப்பெடுத்து அதை விடுதலைப் பயிருக்கு உரமாக அளித்த மகாத்மாவை சிலை எடுத்துக் கும்பிடவேண்டிய அந்த தெய்வத்தை சிறையில் அடைத்து இறுமாந்திருந்தனர் இங்கிலாத்தில்கோலோச்சிய கோமன்கள்.

## கணவரின் வழியில்

அண்ணலுடன் அரும்பெரும் தலைவர்கள் சிறைப்பட்டதைக் கண்டு நாடே கலங்கித் தவித்தது. கொதித்தெழுந்தது. அடக்குமுறையின் அலங்கோலம் தாளாது ஆயிரம் ஆயிரம் பேர் அபயக்குரல் எழுப்பினர். அது அன்னையின் காதில்விழுந்தது. வரிகொடா இயக்கத்தின் விபரம் அவருக்குப் புரியாது. உப்பு எடுப்பதன் தத்துவம் தெரியாது. ஆனாலும் கணவர் புரியும் பணியில் மனைவிக்கும் பொறுப்புண்டுஎன்பது மட்டும் புரிந்தது. அவதிப்படும் மக்களுக்கு ஆறுதலாக இருப்பதுதான் தமது கடமை என்று கிராமம் கிராமமாகச் சென்றார். புண்பட்ட உள்ளங்களுக்கு புத்துயிர் அளித்

(7-ம் பக்கம் பார்க்க)





மகாராஜா குழுக் கம்பனிகளின் மூல வளங்களையும் நிதி நிபுணர் குழு ஒன்றின் திறமையையும் பின்பலமாகக் கொண்டு மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் உங்கள் பணத்தைப் பாதுகாப்பாக முதலீடு செய்ய வாய்ப்பளிக்கிறது.

குறைந்த பட்சம் ரூ. 500/- அல்லது அதற்கும் அதிக முதலீட்டுடன் நீங்கள் ஆரம்பிக்கலாம். மாதாந்தம் அல்லது காலாண்டுக்கோ அரையாண்டுக்கோ ஆண்டுக்கோ ஒரு தடவையில் வட்டி கிடைக்கும். பணத்தை அவசரத்துக்கு இலகுவாக மீட்டுக் கொள்ளவும் வசதி அளிக்கிறோம்.

தனிநபராக அல்லது பலர் கூட்டாகச் சேர்ந்து நிலுவை முதலீடு செய்யலாம்

நீங்கள் பெறக்கூடிய உழைப்பின் உச்சம்-

36 மாதங்களுக்கு வருடாந்தம் 13%

24 மாதங்களுக்கு வருடாந்தம் 12%

12 மாதங்களுக்கு வருடாந்தம் 10%

வட்டியையும் திரும்ப முதலீடு செய்வது பற்றிப் பேசிக் கொள்ளலாம்.

மேற்கொண்டு தகவல் பெற, கூப்பனை நிரப்பி அனுப்புங்கள். தொலைபேசியிலோ, நேரிலோ தொடர்பு கொண்டாலும் மேலும் விபரம் தெரிவித்து, நிபந்தனையின்றி நில்வை முதலீட்டுப் பத்திரங்களை வழங்குவோம்.

நிலுவை முதலீடுகள்
மகாராஜா
இன்வெஸ்ட்மென்ட்ஸ்
லிமிட்டெட்
த. பெ. எண், 319, கொழும்பு
அன்புடையீர்,
நான்/நாம் தங்கள் நிலுவை முதலீட்டுத் திட்டத்தில் முதலிட விரும்புகிறேன்/விரும்புகிறோம். தயவுசெய்து, நிபந்தனையின்றி மேலும் விபரங்களும் விண்ணப்பப் பத்திரங்களும் அனுப்பி வையுங்கள்:
முழுப்பெயர்/பெயர்கள்: ____________
விலாசம்: ____________
ஒப்பம்

மகாராஜா
இன்வெஸ்ட்மென்ட்ஸ்
லிமிட்டெட்
மகாராஜா குழுக் கம்பனிகளின் ஓர் உறுப்பு
54, பாங்ஷால் வீதி, கொழும்பு 11
தொலைபேசி: 23603-6

# வாரியாருக்கு இலங்கையில் ஒரு சிஷ்யர்!

## குருநாதர் வழியில் பணிபுரியும் சிவ அன்பு

சந்திப்பு: ரவீந்திரன்

"தமிழ் வாழவேண்டும் என்ருல், சைவம் வாழவேண்டும், இவை இரண்டும் ஒன்றை ஒன்று இணைபிரியாதவை. தமிழர்கள் தெய்வ நம்பிக்கைகளை மறந்ததும், ஆத்மீகத்துறையில் உள்ள பின்நோக்குமே இவர்களுக்குச் சாபக்கேடாகி இவர்களைத் துன்புறுத்துகிறது என்று நான் எண்ணுகின்றேன்".

இவ்வாறு திரு. சிவஅன்பு என்னிடம் தெரிவித்தார்.

திரு. சிவ அன்பு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுடைய சிஷ்யர். மிகவும் சாதாரணமாகவும் எளிமையாகவும் தோற்றமளிக்கும் இவர் கெக்கிராவை அரசினர் வைத்தியசாலையின் உப வைத்திய அதிகாரியாகவிருக்கிருர்.

ஈழத்திற்கு திருமுருககிருபானந்தவாரியார் அவர்கள் வந்திருந்த சமயம் 13வது வயதில் அவரது சமயஅறிவாலும் கதாகாலேட்சபத்தாலும் கவரப்பட்டுத் தன்னை அவரது சிஷ்யனுக அர்ப்பணித்து அவரது வாத்தியக் குழுவில் சேர்ந்து சுதிப்பெட்டி போட ஆரம்பித்தாராம். பின்னர் தமது குருநாதரின் வழியிலே தாமும் கதாகாலேட்சபவம் செய்கின்ற பணியில் 21 வருடங்களாக ஈடுபட்டிருப்பதாக மிக அடக்கத்துடன் கூறும் சிவஅன்பு தொடர்ந்து மூன்று மாதங்கள் அவருடன் தங்கியிருந்து பல கதாகாலேட்சப நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதாகக் கூறுகிருர். திருமுருக கிருபானந்தவாரியாருடைய 60 வயதுப் பூர்த்தி விழாவிலே சிவபூஜை எடுத்ததாகவும் அன்றிலிருந்து தொடர்ந்து அதை ஆத்ம பூஜையாக நடாத்திவருவதாகவும் கூறினர்.

### வாரியாரின் குணதிசயங்கள்பற்றி...

திரு சிவஅன்பு வாரியாரது குணதியங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் கூறியதாவது: அதிகாலை எழுந்து நித்தியபூசை செய்தபின்பே உணவு உட்கொள்ளும் வழக்கமுடையவர் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பூஜையை முடிக்கமுடியாமற் போய்விட்டால் இரவானுலும் சரி அன்ன ஆகாரம் . எதையுமே உட்கொள்ளமாட்டார். குறைந்தது இரண்டு மணி நேரமாவது உள்ளன்போடு கண்ணீர் சிந்தி இறைவணக்கத்தில் ஈடுபடுவார். இவற்றையெல்லாம் விட மேலான சிறந்ததொரு குணதிசயம் அவரிடம் உண்டு. அதாவது தனக்கு ஒரு பாடலைச் சொல்லிக்கொடுத்த ஆசிரியரைக் கண்டாலும் அவருக்கு மரியாதை செலுத்துவதோடு அவரது குடும்பத்திற்கும்வேண்டிய உதவிகள் செய்வார். இவரது இத்தகைய சிறப்பான குருபக்தியை நான் எவரிடத்தும் கண்டதில்லை. தன் வாழ்நாளில் பல லட்சங்களை திருப்பணிக்காக செலவிட்ட ஒரு மகான் இவர். இவரையே என் வாழ்வின் குருதேவராக நான் கருதுகின்றேன்.

### ஒரு சம்பவம்

"இவ்வளவு தூரம் வாரியாரிடத்தில் அன்பும், விசுவாசமும் கொண்டுள்ள நீங்கள் அவருடன் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் மறக்கமுடியாத சம்பவங்கள் எதையாவது குறிப்பிடுவீர்களா?" என வினவியபோது சிறிதுநேரம் சிந்தனையில் இருந்தவர் சிரித்துக்கொண்டே சொன்னர் "கொழும்பு கதிரேசன் கோவிலில் வாரியாரது மகாபாரதத் தொடர்நிகழ்ச்சிக்குத் தாளம் போடுகின்ற பணியை என்னிடம் ஒப்படைத்திருந்தார். நிகழ்ச்சியில் நான் தாளம் போட்டுக்கொண்டிருந்த சமயம் ஒரு பெரியவர் என்னிடம் இருந்த தாளத்தைப் பிடுங்கிக்கொண்டார். இதைக் கவனித்த குருநாதர் அபூர்வ தாளத்தில் ஒரு திருப்புகழைப் பாடினர். தாளத்தைப் பிடுங்கியவர் திகைத்தார். உடனே வாரியார் அவர்கள் அவரிடம் இருந்த தாளத்தைப் பெற்று என்னிடம் தந்தார். நான் தொடர்ந்து பாடலுக்கு ஏற்றமாதிரி தாளம்போட்டு முடித்ததும் "வித்துவான்களே இந்தத் தாளத்திற்குத் திணறிடுவாங்க உன் துணிச்சலையும் திறமையையும் பாராட்டுறன்" என்று மெச்சிக்கொண்டார் தாளம்போடமுற்பட்ட அன்பர் மெதுவாக நழுவிக்கொண்டார். அந்த நிகழ்ச்சி என் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாகும் என்கிருர்".

உங்களுக்கு பொதுமேடை அனுபவங்களைவிட வேறு அனுபவங்கள் உண்டா என்று கேட்டபோது, இதை ஒரு ஆத்மீகத் தொண்டாக எண்ணிப் பணியாற்றிவருகின்றேன். இலங்கை வானொலியில் 60-ம் ஆண்டுமுதல் நிகழ்ச்சிகளை அளித்துவருகின்றேன் என்ருர்.

நீங்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருப்பதனுல் இதன் மூலம் தமிழருக்கும் குறிப்பாக இந்துக்களுக்கும் கூறக் கூறக்கூடிய அறிவுரை என்ன என்றேன். "தமிழ் வாழவேண்டும் என்ருள் சைவம் வாழவேண்டும்.இவை இரண்டும் ஒன்றை ஒன்று இணைபிரியாதவை. சைவர்கள் தெய்வ நம்பிக்கை இழந்ததும் ஆத்மீகத் துறையிலுள்ள பின்னேக்குமே இவர்களுக்குச் சாபக் கேடாகி அவர்களைத் துன்புறுத்துகின்றது என நான் கருதுகின்றேன். மகாத்மா காந்தி அவர்களுடைய ஆத்மீகபலமே இந்தியாவை மீட்டுக்கொடுத்தது. அந்தவகையான ஒரு ஆத்மீக பலம் கொண்ட ஒருவரால் நாடும் நற்பயனடையும். மகாத்மா அவர்கள் பல்லெல்லாம் இழந்த பின்னும் அவர் சிரித்த சிரிப்பு ஐந்துகண்டங்களையும் மயக்கியது. ஆனல் நமது பெரியவர்களிடம் அத்தகைய சக்தியில்லை! காரணம் அவர்களிடம் அத்தகைய ஆத்மீக பலம் இல்லாததுதான். இதை மனதிற்கொண்டு ஒவ்வொருவரும் ஆத்மீகத்துறையில் படிப்படியாக முன்னேறவேண்டும். தமிழர்கள் குறிப்பாக சைவர்கள் தாம்கடைத்தேறும் வழியில் தமது எண்ணங்களை ஆக்கிக்கொள்ளவேண்டும். என்னுடைய வைத்தியத்தொழிலை உடற் சிகிச்சையாகவும் இப்பணியினை உயிர்ச்சிகிச்சையாகவும் கருதி என் வாழ்நாளை இப்பணிக்காக முற்றுமுழுதாக அர்ப்பணித்து தமிழும் சைவமும் இந்த நாட்டில் மேலோங்கி வாழ என் பணியினைத்தொடருவேன் என்கிருர். 'நன்றி' கூறி அவரிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்.

# போலிமருந்துகளை வாங்கி ஏமாறாதீர்

டாக்டர் ச. இராசரத்தினம்

(முன் தொடர்ச்சி)

மற்றது ஒரு மலிவானதும் சத்துநிறைந்ததுமான தவிடு. இதில் ஒரு மேசைக் கரண்டி தினமும் உண்டுவர ஒரு மாதத்தில் உங்களில் ஏற்படும் மாறுதல்களை நீங்களே உணர்வீர்கள். பாரம் கூடும். கால், கை எரிவு குறையும். நடுக்கம் தூர அகலும். நரம்புத் தளர்ச்சியைப்போக்க சக்தியைப் பெறுவதற்காக நீங்கள் காசை அள்ளி இறைத்து, பல படிகள் ஏறி இறங்கவேண்டிய அவசியமே இல்லாமல் போய்விடும். அவைகளால் ஒரு பலனும் அடைந்திருக்கவும் மாட்டீர்கள். நீங்கள் பலனடைந்ததாய் உணர்ந்தால் அது உணர்ச்சிமட்டும்தான்! "எவ்வளவு தொகையைக் கொடுத்தோம். பலனிருக்கத்தான் வேண்டும்" என்ற நம்பிக்கை உத்சாக உணர்ச்சியைத் தருகிறது.

தவிட்டைச் சோற்றுடன் சேர்த்துண்ணலாம், பாலில் கலந்து குடிக்கலாம். தேனுடன் கலந்தருந்தலாம். ஒரு வயதிலிருந்தே உட்கொள்ளலாம். முதியோர்கள் பனங்கட்டியுடன் இந்தத் தவிட்டைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பார்கள் முன். இன்றும் இந்தப் பழக்கம் உண்டு என்று ஊகிக்கக் கிடக்கின்றது. மேலும் நல்ல கமக்காரரர் வசமுள்ள நாம்பன், பசு மாடுகளுக்கு தவிடு ஒரு பிரதான உணவு என அறிவோம். அவை உருண்டு திரண்டு மொழுமொழுப்பாய் இருப்பதைக் காணலாம். ஒரு புதிய உணவை நான் புகுத்த எத்தனிக்கவில்லை. அரிசியைத் தீட்டிக் கழித்தோமே அதன் சிவப்புப் போர்வையைக் கழிக்காமல் உண்ணவே உங்களை அழைக்கின்றேன். ஒரு தேக்கரண்டிகொண்டளவு ஒரு வயதிலிருந்து உண்ணலாம். ஒரு மேசைக்கரண்டிகொண்டது வயது வந்தபின் போதுமானது. இது மலக் கட்டுப்பாட்டையும் நீக்குவதை அவதானிக்கலாம்.

### ஏன் இந்த நிலைமை

இந்நாட்டுக்குத் தேவையான மருந்து வகைகளெல்லாம் மருந்துக் கூட்டுத்தாபனத்தாராலேயே இறக்குமதிசெய்யப்படுகின்றது அப்படியாயின் மருந்துகளைத் தரமற்றவை என்று திருப்பி அழைக்க ஏன் சந்தர்ப்பம் ஏற்படவேண்டும்? உபயோகத்துக்கு விடமுன் அவைகளின் தரங்கணிக்கப்பட்டன்றே (Quality Control) இருத்தல்வேண்டும். இது செய்யமுடியாதிருந்தால் இறக்குமதியாகமுன் அந்தந்த நாட்டு அரசிடமிருந்து தரம் விசாரிக்கப்படவில்லை. தயாரிக்கும் கொம்பனிகளின் மருந்து தயாரிக்கும் தரம் நேர்மை விசாரிக்கப்பட்டிருக்கலாமே.

இன்னேர்சீர்கேட்டைவாசக நண்பர்கள் அறியத்தரவேண்டும். இரு வாரங்களுக்குமுன் இரத்மலானையில் இயங்கும் மருந்துக் கொம்பனியின் "ஏஜன்ற்" ஒருவர் மருந்து வகைகள் மலிவான விலையில் தரமுடியும் என்று வந்தார். 'ஜேர்மன் டெற்ருசைக்கிளின்' தங்களிடமிருப்பதாகவும் சொன்னர். கொம்பனியின் முகவரி ஏதோ பெரிய வெள்ளையர் கூட்டம் என்றதையே காட்டுகிறது. மருந்துக்கூட்டுத்தாபனத் தலைவருக்கு இந்தக் கொம்பனி பற்றி விசாரித்து எழுதினேன்' என்னுடைய ஐயுறவு நிச்சயமாக்கப்பட்டது. இதுபோலிக் கொம்பனி என்றும் போலி மருந்துகளை விற்பனை செய்பவர்களென்றும் இவர்களை பொலிசில் பிடித்துக்கொடுக்கும்படியும் அது நாட்டுக்குச் செய்யும் சேவையாகும் என்றும் குறிக்கப்பட்டிருந்தது. அத்துடன் தான் அனுமதித்த விநியோகத்தர்களிடமிருந்தே எங்கள் தேவைகளைப் பெறவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்தப் போலிகள் பெரிய கார்களில் பவனிவருவார்கள். எங்களிடம் கொள்ளையடித்த பணம் இது.

ஒரு சகோதரி 'டெற்ருசைக்கிளின்' மலிவாக விலைப்படுகிறதென்றும் தான் குளிசை ஒன்று பத்துச் சதமாக வேண்டியதாகவும் சில நாட்களுக்கு முன் சொன்னா[illegible]

"தங்கச்சி! நீங்கள் வேண்டியது. டெற்ருசைக்கிளினுயிராது. ஏமாற்றப்பட்டுவிட்டீர்கள். மருந்துக்கூட்டுத்தாபனம் சில்லறைக்குக் கட்டுப்படுத்திய விலையே பதினெட்டுச் (18) சதம்" என்று நான் கூற, அவர் அதிர்ச்சியுற்ருர். தாங்களே தங்களுக்குப் பரிகாரம் செய்பவர்கள். அறியாது இவைகளை வேண்டி அவதிக்குள்ளாகிருர்கள். எல்லாரிடமிருந்தும் மருந்துகளை வேண்டுவது ஓயவேண்டும். தரமான விற்பனையாளரிடமிருந்தே பெறவேண்டும். அவர்கள் மருந்துகள் விற்க அனுமதி பெற்றவர்களாயுமிருத்தல் வேண்டும். இந்த 'டெற்ருசயிக்கிளீன்' கூட்டுக்குளிகைகளையே 'ஐந்து லட்சம்' என்றும் அழைக்கிருர்கள். அண்மையில் உரும்பராயிலிருந்து ஓர் அன்பர் ரூபா 7-50-க்கு வேண்டிய 7 கூட்டுக்குளிகைகளைக் கொண்டுவந்து இவைகளைத் தனது மனைவியின் தீட்டுக் குழப்படிக்குக்கொடுக்கலாமா? என்று வினவினர். பெட்டியைப் பார்த்தேன். அந்தக் கூட்டுக்குள் என்ன மருந்து அடைக்கப்பட்டிருக்கிறது என்று குறிக்கப்படவில்லை. என்ன என்ன மருந்துகள் இவைகளுள் இருக்கின்றன என்று பெட்டியிலோ போத்தல்களிலோ குறிப்பிடப்பட்டிருக்கும் குறிக்கப்படவேண்டும். இல்லாவிடின் அவை போலி என்றே கருதப்படவேண்டும். இந்தப்பெட்டியில் அக்குளிகைள் குணப்படுத்தும் நோய்கள் குறிக்கப்பட்டிருந்தது. மலேரியா, மூலத்தால் இரத்தம் போதல், இரத்தச் சோகை வேறும் பல, என்றெல்லாமிருந்தது! அந்தக் கூட்டுக்குள் என்ன மருந்து இருக்கிறதென்று குறிக்கப்படாதபடியால் கொடுக்க வேண்டாமென்றும் மருந்துகளை வேண்டமுந்தியன்றே டாக்டர்மாரை அணுகவேண்டுமென்றும் அறிவுறுத்[illegible]. பெட்டிகளில் 'அமரிக்கன் [illegible]ரெனிக், இங்லிஸ் கப்சூல்,

(8-ம் பக்கம் பார்க்க)

# ஓர் இலட்சிய புருஷனின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தார் ஏழு மாத சிறைவாசத்துக்குப்பின் காந்திஜியும் இதர தலைவர்களும் திடீரென்று விடுதலைசெய்யப்பட்டனர். கெஞ்சினல் மிஞ்சுவது, மிஞ்சினல் கெஞ்சுவது என்ற அரசியல் கொள்கையில் இருந்தது ஆங்கிலேய அரசாங்கம். காந்திஜியுடன் சமரசம் பேசி அவரை இரண்டாவது வட்டமேசை மகாநாட்டில் கலந்துகொள்ள இங்கிலாந்து அழைத்தது. ஆங்கிலேய அரசாங்கம் அவர்களுடன் உடன்பாடு காண்பது கடினம் என நாடு திரும்பினர். மீண்டும் கைது செய்யப்பட்டார் காந்திஜி. நாட்கள் வெகு வேகமாக சுழன்றன. அதற்குள் எத்தனை இன்னல்கள். எத்தனை சோதனை அப்பப்பா! அவை வெறும் வார்த்தைகளால்சொல்லமுடியாதவையே. மனித முயற்சியாலோ, மருந்தின் சக்தியாலோ இனி கஸ்தூரிபாவின் உயிரைப் பிடித்து வைக்கமுடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. மண்ணுலக பந்தங்களை அறுத்துக்கொண்டு அவரது புனித ஜீவன் விண்ணுலகப் பயணத்துக்குப் புறப்பட்டுவிட்டது எழுபதுஆண்டுகளுக்கு மேலாக உடல் என்ற சிறையில் தவம் கிடந்த உயிர் விடுதலைபெறப்போகும் இறுதிக்கட்டம் வருடம் 1944 பெப்ரவரி மாதம் 22-ம் திகதி செயற்கை பிராண வாயு செலுத்தப்பட்டுக்கொண்டிருந்ததால் அவரால் சிரமக சுவாசிக்க முடிந்தது. மகாத்மாவின் அருகிலேயே உட்கார்ந்திருந்தார். கணவரின் மார்பை பஞ்சணையாக்கி அவர் அரவணைப்பில் இளம் தென்றலாகி அவர் அன்புமொழிகளை எல்லாம் அமுதாகப் பருகி இதுவரை காணுத சுகத்தையெல்லாம் நுகர்ந்துகொண்டிருந்தார். அடிவயிற்றிலிருந்து புறப்பட்ட காற்றுக் குழாய் பிழந்துகொண்டு தொண்டையைக் கிழித்தவாறு ஒரு இருமல். பாவின் முகம் சிவந்தது. நரம்புகள் எல்லாம் புடைத்து துடித்தன. பரதகுலப்பெண் எம்மாதிரியான மரணத்தை பெரும் பாக்கியமாக கருதுகிருளோ அந்த மரணம் கஸ்தூரிபாவுக்கு கிட்டியது. கணவரின்மடியில் தலைவைத்துசர்வமங்களத்துடன்சௌபாக்கியவதியாக அறுபத்திரண்டு ஆண்டுகள் மலரும் மணமும்போல நகமும் சதையும் போல இணைபிரியாமல் வாழ்ந்த அந்த அகிம்சைத்தாய் இந்த உலகிலிருந்து மறைந்தாள்.

# ஆவியுலகத் தொடர்பு—3

# மீடியம் எனப்படுபவர் யார்?

இறந்தவர்கள் ஆவி உலகிலிருந்து பூவுலகம் வருகிறார்கள். நம்மைப் பார்க்கிறார்கள். நாம் பேசுவதைக் கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் நம்மோடு நேரடியாகப் பேசமுடிவதில்லை அவர்கள் நம் காதுகளுக்கருகில் வந்து பேசினாலும் நமக்குக் கேட்காது. எனவே அவர்கள் தங்கள் மனதில் நினைப்பவைகளை நமக்கு அறிவிக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு ஏதேனும் ஒரு மனித சக்தி தேவைப்படுகிறது. அதாவது ஒரு மனிதரை உபயோகித்து அவர் மூலம் சில முறைகளால் நம்மோடு கதைக்கிறார்கள். அந்த மனிதரே மீடியம் என்றழைக்கப்படுகிறார் உலகம் முழுவதும் வழங்கப்படும் ஆங்கில வார்த்தை அது (Medium ஆவிகள் மீடியத்தில் உடலில் இருந்து எக்டோபிளாசம் என்னும் சக்தியை உபயோகித்துக்கொள்கிறார்கள்.

ஆவிகள் மீடியத்தின் உடலை இயக்கி நம்மோடு பேசுகின்றன. எல்லா மனித உடல்களையும் அவர்களால் தங்கள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்து இயக்க முடிவதில்லை சிலருடைய உடல்களோ சுலபமாக இயங்கக் கூடியதாக உள்ளன அப்படிப்பட்டவரே மீடியமாக இயங்க முடியும். ஆவிகளை நம்பாதவர்கள் சிலர் எங்கே என் மூலம் ஆவிகளைப் பேசச் சொல்லுங்கள் பார்க்கலாம் என்று சவால் விடுவதுண்டு அவர்கள் மேற்கூறிய உண்மையை மனதில் கொண்டு நல்ல மீடியம் தன்மை உள்ளவர் மூலம் ஆவிகளுடன் தொடர்புகொண்டு பார்த்தால் உண்மை விளங்கும், மீடியமாக இருப்பதற்குத் தகுதிகள் ஏதேனும் இருக்கவேண்டுமா?

## மீடியத்தின் தன்மை

ஆண்' பெண் யார் வேண்டுமானாலும் மீடியமாக இருக்கலாம். மீடியம் தன்மை இருப்பதற்கு வயது வரம்பே கிடையாது. ஆனால் 15 வயதுக்குட்பட்டவர்களை இதில் ஈடுபடுத்தக்கூடாது. மீடியமாக இருப்பவர்களின் வயது உலக அனுபவத்தைப் பொறுத்து வரக்கூடிய பதிலும் அற்புதமாக இருக்கும்.

ஆவிகளிடம் எந்தப் பாஷையிலும் பேசலாம். ஆனால் ஆரம்ப நிலையிலுள்ள மீடியங்களுக்கு தாய் மொழியில்தான் பதில் கிடைக்கும். ஆனால் நாள் செல்ல செல்ல ஆவியினுடைய மொழியிலேயே கூட பேச்சு நிகழும்.

ஆனால் இத்துறையை ஆராய்பவர்களுக்கும் மீடியமாக இருப்பவர்களுக்கும் மிகுந்த பொறுமை வேண்டும். ஓரளவிற்காவது கடவுள் பக்தி இருப்பது அவசியம். ஏனெனில் ஆவிகளில் நல்லவர்களுமுண்டு. கெட்டவர்களுமுண்டு. கெட்ட ஆவிகளின் தொடர்பு ஏற்படாமல் தடுத்து—நல்ல ஆவிகளையே நாம் அழைத்துப் பேசும்படி செய்ய இந்தக் கடவுள் பக்தி உதவிசெய்யும். (கெட்ட ஆவிகளால் கெடுதலும் செய்ய இயலும் என்பதை மீடியங்கள் மறக்கக் கூடாது.) எனவே வீட்டில் படுக்கை அறை போன்ற இடங்களைத் தவிர்த்துவிட்டுப் புனிதமான இடங்களிலேயே ஆவிகளுடன் பேச வேண்டும்.

## எதிர்காலம் பற்றி...

ஆவிகள் என்றதுமே எல்லோரும் ஆசைப்படுவது அவர்களிடம் தங்கள் எதிர்காலம் பற்றிக் கேட்கவேண்டுமென்பதே. இது தவறு, இந்தப்பூமியில் நன்மையான காரியங்களைச் செய்து ஆவி உலகிலும் புண்ணிய லோகத்திலும் அதற்கு மேல் உள்ள உலகங்களிலுமுள்ள ஆவிகளால்தான் எதிர்காலம் பற்றிக் கூறமுடியும். இவர்களே சக்திவாய்ந்த ஆவிகள். (ஆவியுலகம் புண்ணியலோகம்-மத்தியலோகம்-பாபலோகம் என்ற மூன்று பெரும் பிரிவுகளாகவும் ஒவ்வொன்றும் பல உட்பிரிவுகளை உடையதாகவும் இருப்பதாக எங்களிடம் ஆவிகள் கூறியுள்ளனர். மதுரை ஆதீனகர்த்தர் சோமசுந்தரத் தம்பிரான் அவர்களும் தம்முடைய புத்தகத்தில் மேற்கண்டவாறே ஆவியுலகத்தைப் பற்றி எழுதியுள்ளார். அவருக்கும் முன்பு இத்துறையில் ஆய்வுசெய்துள்ள மறைமலையடிகள் அருள் இருள் என்று இரண்டு பிரிவாக ஆவியுலகம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். நம் முன்னோர்கள் ஈரேழு பதினான்கு லோகங்கள் என்று எழுதியுள்ளனர். மேல் நாட்டினர் ஆவியுலகம் ஒன்றின் மேல் ஒன்றாக ஏழு அடுக்குகளை உடையது என்று எழுதியுள்ளனர். இத்தகைய சிறிய முரண்பாடுகள் இருந்தாலும் ஆவிகள் அனைத்தும் ஒரே இடத்தில் இருப்பதில்லை என்ற அடிப்படை உண்மையை வாசகர்கள் எப்போதும் மறக்கக்கூடாது!) இத்தகைய உயர்நிலை ஆவிகளைத் தவிர சாதாரண ஆவிகளிடம் எல்லாம் எதிர்காலம் பற்றிக் கேட்டு அவர்களும் ஏதோ ஒன்றைக் கூறிச் செல்ல-அது காலப் போக்கில் தவறுகிவிடுவதைக் கண்டு ஏமாற்றமடைந்த பலர் ஆவிகள் பொய். ஆவி உலகத்தொடர்பு பொய் என்று ஏளனம் பேசுகிறார்கள் பிரச்சாரம் செய்கிறார்கள்.

தங்கள் உறவினர்கள் புண்ணிய லோகத்தில் இல்லாது வேறு உலகங்களில் இருந்தால் அவர்களிடம் என்ன தான் பேசுவது எதிர்காலம் சொல்லும சக்திதான் அவர்களுக்கு இல்லையே என்று சிலர் ஏங்கலாம்? இப்பூவுலகில் நம் உறவினர் ஒருவர் நம்மை விட்டுப் பிரிந்து கடிதத் தொடர்பின்றி வேறு ஊரில் சில காலம் கழித்துவிட்டுப் பிறகு நம் குடும்பத்தை நாடி வந்தால் நாம் அவரை எவ்வளவு மகிழ்ச்சியோடு வரவேற்று உபசரித்துப் பேசி மகிழ்வோமோ அதே போல மேற்கண்ட ஆவிகளிடமும் பேசி மகிழலாம். அவர்களின் மரணத்திற்குப் பிறகு குடும்பத்தில் நிகழ்ந்த மாறுதல்களை அறிவிக்கலாம். உயிரோடு இருக்கும்போது அவர்களிடம் ஏதேனும் அபிப்பிராயம் கேட்பதைப் போல இப்போதும் கேட்கலாம். (ஆனல் அவர்கள் சொல்வது அவர்களின் சொந்த அபிப்பிராயங்களே என்பதை நாம் மறக்கக்கூடாது.)

வந்து பேசுவது புண்ணிய லோக ஆவியாக இருந்தால் அவர்களிடம் உண்மையில் பிரச்னைக்குரிய கேள்விகளை மட்டும் கேட்கவேண்டும். அனுவசியமான கேள்விகளைக் கேட்கக்கூடாது. எதையும் மரியாதையாகக் கேட்கவேண்டும். நீ-வா-போ என்று ஏகவசனத்தில் அவர்களிடம் பேசக்கூடாது. அவர்களுக்கும் விருப்பு-வெறுப்பு உண்டு

அலுவலகங்களில் வேலைசெய்வோர் விடுமுறை நாட்களில் குளிக்காமல் கூட சோம்பலாகப் படுத்துக்கிடப்பது உண்டு. இப்படி ஆண்கள் உடல் சுத்தமில்லாத நேரத்திலும்-பெண்கள் மாதத்தில் தனித்துஇருக்க வேண்டிய நாட்களிலும் கண்டிப்பாக மீடியமாக இயங்கக் கூடாது இதை ஆவிகளே விரும்புவதில்லை. நல்ல நிலையில் இருக்கும் சக்திவாய்ந்த ஆவிகள் மீடியமாக இருப்பவர்கள் அசைவ உணவு அருந்துவதைக் கூட விரும்புவதில்லை.

மீடியமாக இருப்பவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் இத்தொடர்பால் ஆதாயம் தேட முயலக்கூடாது இதில் மேலும் மேலும் ஆராய்ச்சி செய்யவேண்டும் உண்மையை அறியவேண்டுமென்று ஆர்வத்துடன் ஈடுபட்டால் வெற்றி நச்சயம்.

## வி. ரவிச்சந்திரன்

## போலி . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று இறக்குமதிசெய்யப்பட்ட மேல் நாட்டு மருந்துகள் என்று கருத்துப்பட அச்சடிக்கப்பட்டிருக்கும். ஆனல் அவைகள் போலிகள். நோயாளர் இவைகளினின்றும் காப்பாற்றப்படவேண்டும். இந்த நிகழ்ச்சியை மருந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் பேராசிரியர் பிபிலே அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறேன். தரம்குறைந்த மருந்துகளையும் முழுப்போலி மருந்துகளையும் கடைகளிலிருந்தும் அகற்ற அரசினர் ஆவன செய்யவேண்டும்; அத்தோடு மருந்துகள் விற்க அனுமதி பெற்ற பெயர்ப்பட்டியல் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரி எழுதியிருக்கிறேன்.


தெய்வ அனுக்கிரகம்! பூரண சுகம்

மாருத நோய்களை மாற்றிவைக்கிறார். தீராத்பிணிகளையும் தீர்த்துவைக்கிறார்.



ஆஸ்தமா, பீனிசம், மூலவியாதி கொடிய வியாதிதான் ஆனலும் நெடுக அதற்கு அடிமையாகத்தான் வேண்டுமா? வள்ளிமலை மூலிகை மருந்துகளை பாவித்தோர் பலர் குணமடைந்துள்ளனர்.

மாதர்களே! வயிறுப்பொருமலா? முகத்தில் சுருக்கம் விழுகிறதா? மாதவிடாய் கோளாறு? வெள்ளை படுகிறதா? பித்தச்சூடா? கைகால் எரிவா? நாரி உழைகிறதா? மூடி நரைக்கிறதா, ஒரு தடவை வள்ளிமலை மூலிகைகளை பாவித்துப்பாருங்கள். சுகம் தெரியும்.

வாலிபரே! தவறான பழக்கங்களாலும், கூடாத சகவாசத்தாலும் வாழ்வை பாழாக்கிவிட்டோமே என்ற கவலையை விட்டுத்தள்ளுங்கள். எந்த ரகசியவருத்தமானலும் எழுதுங்கள். விஷயத்தை பரம ரகசியமாய் வைத்து குணமாக்கித் தருகிறோம்.

திருமணவாழ்வு சோபிக்கவில்லையா? வேண்டிய சுகத்தை அனுபவிக்கமுடியவில்லையா? வீரிய சக்தியை மீட்டுத்தரும் மூலிகை மருந்துகள் உண்டு உட்கொண்டதும் வீரிய உணர்வை அறிவீர்கள். உங்கள் மனைவியையும் திருப்திப்படுத்துவீர்கள்.

நாற்பது வயதாகிவிட்டதால் வீரியக்குறைவு தலைகாட்டலாம். அதனைக்கண்டு துவண்டுவிடாதீர்கள். எழுதுங்கள். பயன்பெறுங்கள்.

தேமல், மஞ்சட்காமாலை, இடையிட்டுவரும் செவிட்டுத்தன்மை, வாதரோக பிடை, கெற்பக் கோளாறுகள் முதலான சகல பிணிகளுக்கும் சிகிச்சை உண்டு.

வசியம்! வசியம்!

வியாபாரம் விருத்தியாக, பதவிஉயர்வு தேடிவர, நினைத்தகாரியம் கைகூட வேளாண்மை பெருக, காதலில் வெற்றிபெற, பரீட்சையில் சித்திபெற பகைவனை வெல்ல, கல்வியில் ஊக்கம் காட்டக்கூடிய வசியங்களும், சாந்தியும் செய்துதரப்படும்.

யுவதிகளே! 26 வயதாகியும் ஏதாவது தோஷத்தால் திருமணம் தடைப்பட்டிருந்தால் அல்லது பேசிய திருமணம் தடைப்படுமானலும் எழுதுங்கள். குறையை நீக்கி உங்கள் வாழ்வை ஒளிமயமாக்குவோம்.

வள்ளிமலை மூலிகைச் சித்தர் தரும் சுகமே சுகம்!

ஸ்ரீபால சுப்பிரமணிய சுவாமி,

745, ஸ்ரீமாவோ பண்டாரநாயகா மாவத்தை, கிரன்பாஸ் போஸ்ட், கொழும்பு-14.

(ஸெயின்ஸ்தான் தியேட்டருக்கு சமீபமாக)


## வரப்பெற்றோம்

நூல்: 'தமிழர்செல்வ செல்வா' ஆசிரியர்: புத்தொளி. வெளியீடு; தமயந்தி பதிப்பகம், அச்சுவேலி. விலை ரூபா 2-00.

சுதந்திரத்துக்குப் பின் இலங்கை வாழ் தமிழ்மக்கள் சரித்திரத்தில் அமரர் தந்தை செல்வாவுக்கு சிறப்பான தனி இடம் உண்டு. இன்று தமிழ் மக்கள் தனித்தமிழ்நாடு கேட்கும் அளவுக்கு எழுச்சிபெற்று நிற்கிறார்களென்றால் அதற்கான ஆரம்ப வித்திட்டு வளர்த்துவிட்டுச் சென்றவர் அவர். அவரது அரசியல் வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் தமிழினத்தின் உயர்வை நோக்கமாகக் கொண்டே அமைந்தது— அவை ஒவ்வொன்றுமே ஒரு நூலாக எழுதப்படக்கூடியவை.

ஆசிரியர் 'புத்தொளி' தந்தை செல்வாவின் வாழ்க்கையின் சில அம்சங்களை— தமிழ் மக்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய அம்சங்களை நூலுருவில் தந்திருக்கிறார். ஆசிரியர் தமிழர் விடுதலை கூட்டணியின் பரிணாம வளர்ச்சியின் பல்வேறு நிலைகளையும் நன்கு அறிந்தவர் அந்த இயக்கத்துடன் ஒன்றிணைந்து செயல்படுபவர்- அதனல் இந் நூலை அவர் எழுதி வெளியிட்டமை ஆச்சரியத்துக்குரியதன்று தந்தை செல்வாவின் வாழ்க்கையை முழுமையாகச் சித்தரிக்கும் நூல் ஒன்றை 'புத்தொளி' எழுதி வெளியிடவேண்டும் என்பது தமிழபிமானிகளின் விருப்பம்.

கலைவல்லி ஆடி இதழ்: வழமைபோல் பலவண்ண முகப்பு அட்டை. சுவையான கதை, கட்டுரைகள் பொருத்தமான படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன.

புதுவை இரத்தினதுரையின் 'அமைதியைக் குலைக்கும் ஆரவாரங்கள்' சிந்தனையைத் தூண்டுவதாய் உள்ளது. இளங்கிரனின் மனிதபுராணம், காவலூர் ஜெகநாதனின் 'பூச்சூடி புதுப்பட்டு நான்சூடி' ஏஜென்ஸியின் ........ போன்றவை ரசித்துப் படிக்கும்படியாகவுள்ளன வழமையான ஏனைய அம்சங்களும் இடம் பெற்றுள்ளன

## நியூயோக பெண்களின் போராட்டம்

நம் நாட்டில் பெண்களுக்கு சம சம்பளம் கேட்டுப்போராடுகிறார்கள் அல்லவா? நியூயோர்க்கில் தொழில் செய்யும் பெண்கள் கழகத்தினர் தொழில் செய்யும் பெண்களுக்கு நல்ல வேலை சூழ்நிலை இருக்க வேண்டும் என்று போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள்.

வேலை வாங்குவோர் பெண்களை அதிகாரியாதையுடன் நடத்த வேண்டும். வேலைகள் என்ன என்பதை முன்கூட்டியே திட்டவட்டமாகக் கூறிவிட வேண்டும். முதலாளியின் தலையிலுள்ள வெள்ளை மயிர்களைப் பிடுங்குவது, வெளியில் நிற்கும் அவரது காரின் மீது படியும் பனிப்படலத்தை அகற்றுவது, அவருக்கு டெலிபோன் செய்யும் பெண் நண்பர்களின் பெயர்களையும், டெலிபோன் இலக்கங்களையும் குறித்து வைத்திருப்பது, அவர் பெண்களைச் சந்திப்பதற்கான நேரங்களை ஏற்பாடு செய்வது போன்ற தனிப்பட்ட வேலைகள் செய்யக் கோருவதிலிருந்து விடுதலை வேண்டும் என்று இந்தப் பெண்கள் கோருகிறார்கள்.

## நட்சத்திர மாமா

ஆடி இதழ்! சிறுவர்களுக்கு பரவசமூட்டும் வகையில் முகப்பு அட்டை அமைந்துள்ளது. படிக்கஆரம்பித்தால் கீழே வைக்கத் தோன்றுதவிதத்தில் சிறுவர்களுக்கான கதைகளும்,

[10-ம்பக்கம் பார்க்க[

# சென்னை நீதிமன்றத்தில்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஆறுமுகநாவலரைப் பற்றியே நான் இங்கு குறிப்பிடுகின்றேன். ராணியின் அப்புக்காத்தோடு (கனம்செய்வி) வாதத்தில் சரிநிகர் சமானமாக ஈடுபடக்கூடிய கீழைத்தேச வாதிகளில் இவர் ஒருவராவர். இவர் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்தவ சமயத்துக்கு எதிராக போதிப்பதிலும் எழுதுவதிலும் செலவாகியுள்ளது. இவருக்கு இருக்கும் மக்கள் ஆதரவைப் புறக்கணிக்க முடியாது''

1877-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் கொள்ளைநோயினுலும், மழையின்மையினுலும் பஞ்சமேற்பட்டது. அதனுல் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதைப் பொருட்படுத்தாது அரசாங்க ஏஜன்டாக இருந்த துவையினம் ஈவிரக்கமின்றி வரிப்பணங்களை அறவிட்டார். அதோடு விவசாயிகளுக்கு வழங்கும்படி அரசாங்கம் கொடுத்த விதை நெல்லையும் மக்களுக்கு சரியான முறையில் வழங்கவில்லை இவற்றை எதிர்த்து நாவலர் பிரசாரம் செய்தார். இதனுல் அரசாங்கம் ஒரு விசாரணைச்சபையை நியமித்தது. இவ் விசாரணைச்சபை உண்மையை அறியாதபடி அரசாங்க உத்தியோகத்தர் தடுத்துவிட்டனர். விதை நெல்லை ஒழுங்காகப் பெற்றுவிட்டதாக மக்களிடமிருந்து பொய்ப் பற்றுச் சீட்டுகளைப் பெற்றுக்கொண்டனர். இவ்விஷயம் பற்றி சேர் முத்துக்குமாரசுவாமி சட்ட நிருபண சபையில் ஒரு கேள்வி கேட்டார். இதுபற்றி நாவலர் பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதினுர். ''கமிஷனர்களுடைய றிப்போர்ட்டுப் புத்தகம் பொய்யென்பது உங்களுக்குத் தெரியும், பத்திரிகைக்காரர்களுக்குத் தெரியும். உங்கள் பிரதிநிதியாகிய ஸ்ரீ குமாரசுவாமிக்குத் தெரியும். புதுக் கவர்னருக்கு எப்படித் தெரியும். மனவஞ்சனையில்லாது கமிஷனர்களுடைய பொய் றிப்போட்டினுலேயே மயங்கிவிட்ட புதுக்கமிஷனரிடத்திலே ஸ்ரீ குமாரசுவாமி யாது செய்யலாம். ஆயினும் அந்த மகானுபவர் ஒன்று செய்தார். அது என்னை? கொழும்புச்சட்ட நிருபண சபையிலே ஒரு கேள்வி கேட்டார். அது என்னை? போன வருஷம் விளைவில்லாததினுலே இந்த வருஷம் விதைநெல்லுக்கு முட்டுப்படுகிற ஜனங்களுக்கு விதை நெல்லுக் கொடுக்கும்பொருட்டு கவர்ன்மெண் கட்டளை செய்ததன்றே? அந்தக் கட்டளைப்படி விதைநெல்லு கொடுக்கப்பட்டதா? எங்கெங்கே கொடுக்கப்பட்டது? அவ்விஷயத்தில் செய்து கொண்ட உடன்படிக்கை என்ன?'' என்றுதான் கேள்வி. இந்தக் கேள்வி லட்ஷம் பொன் பெறுமே. எப்படி? விதைநெல்லுக் கொடுக்கப்படவில்லை என்ற உண்மையை நன்கறிந்த ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி, துவையினம் துரையுடைய அநீதியையும் வன்கண்மையையும், பொய்மையையும், புதுக்கவர்ணருக்கு மெல்லென விளக்கி, திக்கற்ற ஏழைகளாகிய உங்களுடைய துன்பத்தை நீக்கும் உபாயம் இதுவெனக் கண்டார். இப்படி நாவலர் ஒருவரைப் புகழ்ந்தது அரிதினுமரிது. மேலும் நாவலருடைய முயற்சியினுலேயே இவருக்குப் பின்னர் இவருடைய மருமகர் இராமநாதன் தமிழர் தமிழர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். சேர். முத்துக்குமாரசுவாமி பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தவராக வர விரும்பினுர். அந் நாட்டு அரசியல்துறையில் செல்வாக்குப் பெற்றிருந்த நண்பர்கள் மூலம் இதனைச் சாதிக்கலாமென அவர் எண்ணினுர். இதன் பொருட்டு 1879-ம் ஆண்டு மறுபடியும் இங்கிலாந்து செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தனர். தமது மனைவியையும், மகனையும் இங்கிலாந்துக்கு 1879-ம் ஆண்டு ஏப்றலில் அனுப்பினுர். தமது அரசியல் அலுவல்களை முடித்துக் கொண்டு விரைவில் போவதாகவிருந்தார். ஆனுல் இருந்தாற்போல் கடுஞ்சுகவீன முற்று 1879-ம் ஆண்டு மே மாதம் 4 ம் திகதி தமது 46-ம் வயதில் அகாலமரணமடைந்தார். இவருடைய சடுதி மரணம் இலங்கை பக்கலைத் துயரக்கடலில் ஆழ்த்தியது. இவருடைய மறைவைப் பற்றி பத்திரிகைகளெல்லாம் பரிந்துரைகள் எழுதின. கீழைத்தேசங்களில் முதன் முதல் தொடக்கப்பட்ட உதயதாரகை என்னும் பத்திரிகை இவர் மறைவைப்பற்றி எழுதியதை இங்கு தருகின்ரேம்.

இலங்காபுரி மகாராசனுகிய இராவணேசுபரனுடைய சிகரங்களில் விளங்கா நின்று சூரியப்பிரபைகான்ற நவரத்தினமகுடங்களைக் குரங்கரசனுகிய சுக்கிரீபன் பறித்தெடுத்து மானபங்கஞ் செய்தானென்ற பழங்கதைபோல, மரணேசுபரனுகிய கூற்றுவனும் இலங்கை மங்கையின சிரேஷ்ட இரத்தினங்களும் சிறந்து விளங்கிய சிறி முத்துக்குமாரசுவாமி இரத்தினத்தைப் பறித்தெடுத்து மானபங்கஞ்செய்து, ஐயையோ! எம் இளஞ்சிங்கமிறப்பதே யென்னேயென்னே என்று எவரையும் இரங்கவுங் கலங்கவும் வைத்துப்போயினன் ஓ! கொடுங்கூற்று. யாலசிங்கம் போன்று சட்டநிருபணச்சமரமத்தியிற் கிளர்ந்து ஒருவர் முகத்தையும் பாராது எடுத்த கருமத்தையே பார்த்து, மேகம் போன் முழங்கிச் சட்டதிட்டங்களினுழும்போய் நிமிர்து, சுனியோடி, இலங்கை மந்திரத்தவருட் சிறந்த மந்திரத்தவரிவரென்று அட்டதிக்கெங்கும் புகழ்விட்டவிவர் 45 வயதிற் தேசவியோக மாவாரெனக் காத்திருந்தவரெவர்? அவ்விராசதானியிலுள்ள பெரியோர், சிறியோர், துரைமக்கள், பிரபுக்கள், ஐரோப்பியர், சுதேசராதியோர், எள்ளிடவிடமின்றி நள்ளிடைதானின்றி அவரது வாசநாடி சரிந்தனர். தேசாதிபதியின் படைத்துணைவர், சட்டநிருபணசபைப் பிரதிநிதிகள், இரசாங்க மந்திரிமார், சிரேஷ்ட நீதிபதியோடு கனிஷ்ட நீதிபதிகள் நாமும் வந்தோம். வந்தோமென்று அத்தருணம் முந்திச் சென்றனர். அத்துவக்காத்து பேடினந்து, வன்லங்கன்பேக், கிறின்லிங்றன், கிறேனியராதியாந் துரை மக்களோடு அவருடைய மருமகனுகிய அத்துவக்காத்து இராமநாதர், சவப்பெட்டி தூக்கி நூதனமாயிற்றப்பட்ட பாடைமீதேற்ற சோட்டுக்குதிரைகளில பாவாடை மேல் நடந்து மூன்றுமைல் தூரம் அதை இழுத்துச்செல்லக் குழம்புகள் ஒழுக்கெறும்பு கொடிவிட்டாற்போல மயானஸ்தானஞ் சென்றவுடன், சிரேட்ட நீதிபதி, ஸ்துவாட் நீதிபதி, இராணியின் அத்துவக்காத்து பேடினந்து, வேன்துரை அத்துவக்காத்து, லிங்கன்பேக் என்னும் ஐவருடன் மருமகன், அத்துவக்காத்து இராமநாதர் கூடிப் பிரேதப்பெட்டியை இறக்கி, இரண்டுவண்டில் சந்தனக் கட்டைகளடுக்கிய ஈமவிறகின் மேல் வைத்தனர். மந்திராலோசனைச்சபையில் எத்தனையோ பேர்களுடைய வாய்ச் சொல்லிலடங்காச் சிறீ குமாரசுவாமிச்சிங்கத்தை அக்கினி பகவான் கணத்திற் சாம்பராக்கினுன்.

## உசாத்துணை நூல்கள்

1. கல்கி தீபாவளிமலர்-1950, Kilpauk, Madras.
2. The life of Sir Ponnambalam Ramanathan - Thirumakal press Chunnakam
3. The life and writings of Sir Muthucoomaraswamy- S. Durairajasingam, House even - section Eleven three Petaling Jaya, Malasiya.
4. A critical examination of Tamil Documents re'ating to the deportation of Sri Vikrama Rajasinha's relatives - Journal of the Royal Asiatic Society-Ceylon-newseries Vol XI.
5. Studies & Translations Sir Ponnambalam Arunachachalam.
6. நாவலர் சரித்திரம் - த. கைலாசபிள்ளை,
7. நாவலர் பிரபந்தத் திரட்டு,
8. யாழ்ப்பாண வைபவ கௌமுதி- க. வேலுப்பிள்ளை.

# சாதனைகள் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்காட், முஸ்தாக் அலி, சி. எஸ். நாயுடு ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணியின் பந்து வீச்சால் தனது அணி முதல் இனிங்சில் படுமோசமாக பாதிக்கப்பட்ட பின் இரண்டாவது இனிங்கில் சதாசிவம் அவர்கள் 111 ஓட்டங்களைச் சேர்த்து தோல்வியினின்றும் காப்பாற்றினுர் இது அவருக்குத் தனிப்பட்ட புகழைத் தேடிக் கொடுத்தது.

## சதாவின் சாதனை

மேற்கிந்திய ஜோன் கொடாட்ஸ் JOHN GODDARD தலைமையிலான குழுவுக்கு எதிரான 99 ஓட்டங்களும் காமன்வெல்த் குழுவுக்கு எதிரான 9 ஓட்டங்களும் திரு. சதாசிவத்திற்கு உலக அரங்கில் புகழ்தேடித் தந்தவைகளில் குறிப்பிடத்தக்கவை.

பந்து வீச்சாளர்களின் சொர்க்கம் எனக் கருதப்படும் சென்னை சேப்பாக்கம் மைதானத்தின் இந்திய 11 குழுவுக்கு எதிராக 231 ஓட்டங்களை சதாசிவம் அடித்துள்ளார். இதுவே இந்த மைதானத்தில் ஒரு ஆட்டக்காரர் சேர்த்த ஆகக்கூடிய ஓட்டங்களாகும். இதுவரை சதாசிவம் அவர்களின் இந்தச் சாதனை டெஸ்ட் ஆட்டக்காரர்களாலும் முறியடிக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இவர் றெஸ்ற் [REST] குழுவுக்காக என். சி. சி. மைதானத்தில் அடித்த டபிள் செஞ்சரியும் அதே ஆண்டில் அரசாங்க சேவைக்கு எதிராக அடித்த செஞ்சரியும் இறுதி சாதனைகளாகும். இந்திய ஜிம்கானு கிளப்புக்காக இங்கிலாந்தில் விளையாடியும் உள்ளார்.

1940க்கும் 1950க்கும் இடையேயான சகாப்தத்தில் முதல் தரமான கிரிக்கட் ஆட்டங்களுக்கு கலபமாக தெரிவு செய்யப்பட்ட சதாசிவத்தின் ஆட்டத்தை ரசிப்பதற்கு என்று கல்லூரி மாணவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை செல்வதுண்டு. சில சமயங்களில் துரதிஷ்டவசமாக அவர் விரைவில் ஆட்டம் இழந்தாலும் கிரிக்கட் ரசிகர்கள் பலத்த கரகோஷம் அளிக்கத் தவறுவதில்லை.

இவருடைய ஆட்டத் திறமையால் பிரபல்ய ஆட்டக்காரரான எவாற்றன் வீக்ஸ் [EVERTON WEEKS], பிராங்வோறல் [FRANK WORRELL], செயித் மில்லர் [KEITH MILLER] போன்றவர்களோடு ஒப்பிடப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைத் தமிழ்யூனியனின் ஆயுட்கால அங்கத்தராக இருந்த திரு. சதாசிவத்தின் காலத்திலேயே தமிழ் யூனியன் முதல்முறையாக சாரா கேடயத்தை [SARA TROPHY] வென்று எடுத்தது.

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

நாகம்மஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி நடித்த
ஹரிச்சந்திரா

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர். - பத்மினி - நம்பியார்
ராணி சம்யுக்தா

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
CRAZY BOYS and
THE QUEEN'S NECKLACE
(Color-Scope)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ (யாழ். நகர்) போன்: 7691
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

ராஜா (யாழ்நகர்) போன்: 7180
78-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.


கடைசிவாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி,
தர்மலிங்கம், ஸ்ரீதேவி
நடித்த
ஜெயேந்திரா மூவீஸ்
காத்திருப்பேன் உனக்காக

REGAL (JAFFNA)
Daily: at 4-45, 7-00 & 9-30 p. m. only
NORMAN WISDOM IN
"ON THE BEAT"
FULL COMEDY

80-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - வைஜயந்திமாலா நடித்த
சித்தூர் ராணி பத்மினி
30-7-77 முதல்
எம். ஜி. ஆர் — லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி — பத்மினி
ராஜபக்தி




தேர்தல் முடிவுகளை அறிவித்ததின் பின்னர் திரு. அ. அமிர்தலிங்கத்தை அரசாங்க அதிபர் திரு. லால் விஜயபாலா பாராட்டுகிறார். அருகில் தேர்தல் அதிகாரி திரு. யோகநாதன், கோப்பாய் பிரதிநிதி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை நன்றி தெரிவித்துப் பேசுகிறார்,

வாரசாரம் — எஸ். எம். ஜி.

# அரசியல் அமைப்புச்சட்டம் புதிய உருவம் பெறுமா?

1972-ம் ஆண்டில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளைக் கொண்ட ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கியது. அச்சமயத்தில் எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் புதிய அரசியல் அமைப்பை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களாவென்பதை அறிந்துகொள்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு கோரிக்கை விடுத்தன.

இதை அந்த அரசாங்கம் மறுத்துவிட்டது புதிய அரசியல் அமைப்பை ஏற்றுக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியினர் அதில் கைச்சாத்திட்டபோதிலும் அதை முற்று முழுதாக ஒப்புக்கொள்ளவில்லை,

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்த வரையில் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கிய சமயத்தில் தாங்கள் சமர்ப்பித்த அடிப்படைக் கொள்கைகள் நிராகரிக்கப்பட்டதனுலும் சில யோசனைகளை ஆராயவே மறுக்கப்பட்டதனுலும் விடுதலைக் கூட்டணியினர் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து வெளியேறினர். தமிழ் மக்களுக்குப் பாதகமாக புதிய அரசியல் அமைப்பு இருப்பதாகக் கண்டித்த கூட்டணியினர் அதைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அமரர் எஸ். ஜே! வி. செல்வநாயகம் தம்து பேரவை உறுப்பினர் பதவியை ராஜினுமாச் செய்துவிட்டு உபதேர்தலில் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டி நிரூபித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட பின் நடைபெற்ற இந்த முதல் தேர்தல் ஒரு விதத்தில் நாடு முழுவதும் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பாகவே கருதப்படக் கூடியது.

இதன்படி பார்த்தால் புதிய அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு நாட்டு மக்கள் புதிய அரசுக்கு அங்கீகாரமளித்திருக்கிறார்களென்பது தெளிவு.

தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தத் தேர்தலை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஈழம் அமைப்பதற்கான சர்வஜனவாக்கெடுப்பாகக் கருதியது. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக முஸ்லிம் பகுதிகள் இக்கோரிக்கைக்குஆதரவளிக்கவில்லையென்பது அந்தத் தொகுதிகளின் முடிவுகளிலிருந்து கூறலாம்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சர்வஜன வாக்கெடுப்புக்கு மிகப் பெரும்பான்மையான ஆதரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

வடக்கில் சாதிப்பாகுபாடு பற்றி பெரிதாகப் பேசப்பட்டது. உடுப்பிட்டித்தொகுதியில் சிறுபான்மைத் தமிழரான திரு. ராஜலிங்கத்தைக் கூட்டணி நிறுத்தியபோது சிறுபான்மை வாக்குகள் குறைவான தொகுதியில் நிறுத்திப் பழிவாங்கும் நடவடிக்கை என்றும் பிரசாரம் செய்யப்பட்டது.

உயர் சாதியினர் என்போர் பெரும்பான்மையாக வாழும் தொகுதியில் சிறுபான்மைச் சமூகத்தவர் ஒருவரை நிறுத்தி வெற்றியீட்டியதன் மூலம் சாதிப் பிரச்னைக்கும் சாவுமணி அடிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டணியின் இலட்சியத்துக்கு மக்கள் அமோக ஆதரவளித்திருக்கிறார்கள்.

இன்று இலங்கையின் எதிர்க்கட்சி ஸ்தானத்தில் கூட்டணி இருக்கிறது.

கூட்டணியின் பொறுப்பும், கடமையும் இன்று அதிகம். புதிய அரசு இப்போது பல புதிய திட்டங்களுடன் ஆட்சிக்கு வருகிறது.

நிதானம்தான் இன்று தமிழ் மக்களுக்குஅவசியம். கூட்டணி மட்டும் நிதானத்துடனும், பொறுப்புடனும் நடந்தால் போதாது. மக்களும், குறிப்பாக இளைஞர்களும் பொறுப்புடனும், நிதானத்துடனும் நடந்து கொள்வது அவசியம்.

தேர்தலில் தோல்வி கண்டு விரக்தியடைந்துள்ள சக்திகள் பற்றியும் எச்சரிக்கை அவசியமாகும்,

## வரப்பெற்றோம்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)
அவைகளுக்கேற்ற படங்களும் இடம்பெற்றுள்ளன.

தென்னகத்து அம்புலிமாமாவுக்கு சவால்விடுவதுபோல் நட்சத்திரமாமா அமைந்துள்ளது.

மாயாஜால மர்ம மந்திரக் கதைகளைப் படித்து சுவைக்க விரும்பும் அனைவருக்கும் சுவையளிப்பதாய் விளங்குகின்றது.

—பெ.

## மட்டக்களப்பில் மேலும் ஒரு கொலை!

மட்டக்களப்பு, சனி

தேர்தல் கலவரங்களை அடுத்து மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த வாழைமுனை என்னும் இடத்தில் நேற்றிரவு ஒருவர் கொல்லப்பட்டார்

ஒரு கட்சியின் ஆதரவாளரான ஜனுப் அப்துல் மஜீத் என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார்

ஜனுப் அப்துல் மஜீத் என்பவர் அவரது வீட்டில் இரவு உணவு அருந்திக்கொண்டிருந்த போது தம்பி லெப்பே என்பவரும் இன்னும் 10 பேரும் அங்கு வந்து மஜீத்தின் தலையில் பொல்லால் அடித்ததாகவும் ஸ்தலத்திலேயே அவர் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது

மரண விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. சிவநாதன் கொலை எனத் தீர்ப்பளித்தார். இக்கொலை தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை

இது இவ்வாறிருக்க காத்தான்குடிப் பகுதியில் இன்றும் பல இடங்களில் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே கலவரங்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது (ம)


## தேர்தல்போட்டி முடிவுகள்

ரோரு ஸ்தாபனத்தாரின்

தேர்தல் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரம் நாளை (25-07-77) ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும்.

த ரோரு லிமிட்டெட்


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 24ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.

## வாரப்பாடு



ஐயா...... சாமி ..... பசிக்குது...... அடுத்த தேர்தல் எப்போ வரும் சாமி?

— சுந்தர்.

## புதிய அமைச்சர்கள்

ஜே. ஆர். ஜெயவர்த்தன — பிரதமர், பாதுகாப்பு, திட்டமிடல், பொருளாதாரம், திட்ட அமுலாக்கல்,
ஆர் பிரேமதாசா — உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை.
காமினி திஸநாயக்கா — நீர்ப்பாசனம், மின்சக்தி, நெடுஞ்சாலைகள்.
ஏ. ஸி. எஸ். ஹமீத் — வெளிநாட்டுவிவகாரம்,
லலித் அத்துலத் முதலி — வர்த்தகம்.
மொண்டேகு ஜயவிக்கிரம — பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள்
திருமதி விமலா கன்னங்கரா — கப்பல், விமான போக்குவரத்து உல்லாசத்துறை
நிஸங்கா விஜயரத்ன — கல்வி,
ரெனி டி மெல் — நிதி.
காப்டன் சி. பி. ஜே. செனவிரத்ன — தொழில்.
ஜி. சிறில்மத்யூ — கைத்தொழில்,
ஈ. எல். பி. ஹுருள்ளே — கலாச்சாரம்.
எஸ். டி. எவ்ட ஜெயசிங்க — கடற்றொழில்.
காமினி ஜெயசூரிய — சுகாதாரம்.
டி. பீ. விஜயதுங்கா — தகவல் ஒலிபரப்பு.
எம். வின்சன்ட் பெரேரா — பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டுத்துறை.
எம் எச் முகமட் — போக்குவரத்து.
ஈ எல் சேனநாயக்கா — விவசாயம், காணி
டி ஷெல்டன் ஜெயசிங்க — தபால், தந்தி
எம் டி எச் ஜெயவர்த்தன — தோட்ட கைத்தொழில்
விஜயபால மென்டிஸ் — புடவை, கைத்தொழில்
கே டபிள்யு தேவநாயகம் — நீதி
எஸ் பி ஹேரத் — உணவு, கூட்டுறவு
அசோகா கருணரத்ன — சமூகசேவை


## மரண அறிவித்தல்

### கண்மணி

காலஞ்சென்ற 'முத்தையா மோட்டோர் ஸ்ரோர்ஸ்' உரிமையாளர் தர்மலிங்கத்தின் அருமை மனைவி கண்மணி அவர்கள் சிவபதமடைந்துவிட்டார்கள். இவர் காலஞ்சென்ற நாகலிங்கம், காலஞ்சென்ற சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், ராமநாதன், அன்னலட்சுமி, சிவராசா ஆகியோரது அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும், முத்துலிங்கம், காலஞ்சென்ற பத்மாவதி, காலஞ்சென்ற தெண்டாயுதபாணி, சத்தியலட்சுமி, கனகலிங்கம், யுகலட்சுமி, பத்மலிங்கம், நடேசலிங்கம் ஆகியோரது அருமைத் தாயாரும், பாலசுப்பிரமணியம், குணரட்னம், கிருஷ்ணமூர்த்தி, சித்திரலேகா, பத்மலோஜினி ஆகியோரது அன்புமாமியும், திலிப்குமார், தர்மகுமார், திருலோக்குமார், நவநீதகுமார், சுரேஷ், ரமேஷ், குலேந்திரன், சித்திரா, பிரபா ஆகியோரது பேத்தியுமாவார். அன்னாரது பூதவுடல் அவரது இல்லமாகிய 'பத்மவாசா, 67/5, தர்மலிங்கம் அவனியூ, கொட்டடி. யாழ்ப்பாணத்திலிருந்து நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக கொட்டடி வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தர். முத்துலிங்கம். 6708